★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 புரட்டாதி 26 ஜுல்ஹஜ் 24 இதழ் 241

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12—10—82

### ஜனாதிபதி தேர்தல்:
## பாதுகாப்பு நடவடிக்கை: யாழ் பொலிஸ் அதிபர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தலின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்புகள் சம்பந்தமாக நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற பொலிஸ் அதிகாரிகளின் மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது.

யாழ் பொலிஸ் அதிபர் திரு ஆனந்தராசா, யாழ் மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளையும் அழைத்து இந்த மாநாட்டை நடத்தினர்.

வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்பளிப்பது, மற்றும் ரோந்து நடவடிக்கைகள்குறித்தும் இம்மகா நாட்டில் ஆலோசிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 436 வாக்களிப்புநிலையங்கள் இடம்பெறவுள்ளன. ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் இராணுவத்தினருடன் ஆயுதம் தாங்கிய இரு பொலிசார் வீதம் பாதுகாப்புக்கு அமர்த்துவதென்றும் இவர்களுக்கு உதவியாக ஆயுதப்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (மா)

### ★ நாடு முழுவதும் உஷார் நடவடிக்கை!

# கலகம் அடக்கும் விசேடபடை

# தேர்தல் காலத்தில் இயங்கும்!

## யாழ். மாவட்டத்தில் மீண்டும் புதிய முகாம்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலையொட்டி விசேடபடையொன்று சேவையில் ஈடுபடும்.

இப்படையில் இராணுவத்திலிருந்தும் பொலிஸ்படையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்கள் கடமையாற்றுவார்கள் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஜனாதிபதி தேர்தல்காலத்தின் போதும், தேர்தல் முடிவடைந்த இரண்டுவார காலம்வரை உஷார்நிலையில் இருக்கும் இப்படையினர், குறிப்பாக கலகம் அடக்கும் படையாகவே கடமையாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுசம்பந்தமான சகல பயிற்சிகளும் இப்படைப்பிரிவினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இக்கலகம் அடக்கும் படையினர் தேர்தல்காலத்தின் போது குறிப்பாக, காலி, கண்டி, குருநாகலை, மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றுவார்கள்.

### வடக்கு நோக்கி

நிலைமை இவ்வாறிருக்க, சுமார் 2 500 பொலிஸாரும் இராணுவத்தினரும் அடுத்த சிலதினங்களில் வடபகுதி போய்ச்சேர்வார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. இவர்களில் 1,500 வெளியூர் பொலிசாரும் 1000 இராணுவத்தினரும் இருப்பார்கள் என்று அறியப்படுகிறது.

### யாழ். நகரில் புதிய முகாம்கள்

இதற்கிடையில் யாழ். சிங்கள மகாவித்தியாலயம், சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி, பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி ஆகியவற்றில் இராணுவ முகாம்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கோண்டாவிலில்
## போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

நான்குலட்சம் ரூபாசெலவில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையைக் கோண்டாவில்-இணுவில் தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் நிறுவவுள்ளது. இத்தொழிற்சாலை கோண்டாவிலில் அமைக்கப்படும்.

இத்தொழிற்சாலையை ஆரம்பிக்க மக்கள் வங்கி நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது.

மேற்படி தொழிற்சாலை நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய அறிக்கையை ஆராய்ந்த வடபிரதேச மக்கள் வங்கி முகாமையாளர்கள் நிதி உதவிவழங்குவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாக மேற்படி சங்கப் பொதுமுகாமையாளர் திரு அ. செல்வராசா தெரிவித்தார். (மா)

**அரிய வாய்ப்பு**

**(Computer programming)**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் - 16-10 82

அனைவரும் சேரலாம். ஒவ்வொருமாணவர்க்கும் Computer இல் பயிற்சி வழங்கப்படும். நேரில் வரவும்.

**நாஷனல் அக்கடமி**

[விவேகானந்த அச்சகம் முன்பாக]
11, மொம்சக் கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4815]

### மோட்டார்சைக்கிளில் சென்ற
## ஒரு இளைஞர் பலி; மற்றவர் ஆஸ்பத்திரியில்

[யாழ்ப்பாணம்]

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மதிலில் மோதிப் பின்னர் கிணற்றுள் வீசப்பட்டதில் ஒருவரைக் கிணறு பலிகொண்டது மற்றவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்தரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புங்கங்குளத்தைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை ஜெரிஸ் தவராசா [19 வயது] என்பவரே பலியானவராவார். யாழ். மாட்டீன் வீதியைச் சேர்ந்த எஸ். ராஜேந்திரன் [21 வயது] என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையில் இந்த விபத்து நடைபெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் மதிலொன்றுடன் மோதியே கிணற்றுள் விழுந்ததாகத் தெரியவருகின்றது.

ஊர்காவற்றுறைப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். [மா]

## 'வாசு' இன்று உரையாற்றுவார்

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் நவலங்கா சமசமாஜக் கட்சி வேட்பாளர் திரு. வாசுதேவநாணயக்கார இன்று பிற்பகல் யாழ். திறந்தவெளியரங்கில் உரைநிகழ்த்தவுள்ளார்.

நவசமசமாஜக்கட்சியின் யாழ். மாவட்டத்தலைவர் திரு. ஆ. க. அண்ணாமலை தலைமையில் கூட்டம நடைபெறும்.

இத்தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் திரு. லீனஸ் ஜெயதிலகா, திரு சுப்பிரமணியம். திரு. சுமணதாச ஆகியோரும் பேசவுள்ளனர். [மா]

## குமார் கூட்டம்

(மட்டுவில்)

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தமிழ்பேசும் இனத்தின் சார்பில் போட்டியிடும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரியில்நடைபெறும், பூநகரி மகாவித்தியாலய அதிபர் திரு. சி. துரைராஜா தலைமையில் சாவகச்சேரிச் சந்தை மைதானத்தில் இக்கூட்டம் நடைபெறும். (அ)

# "இன, மத, மொழி பேதமின்றி நல்லாட்சி ஏற்பட வழி வகுப்பேன்"

### காங்கேசன்துறையில் ஹெக்டர்

[மாவிட்டபுரம்]

"நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் சட்டப் பிரச்னைகளுள் சிக்க நேரிடும் என்று பிரசாரம் செய்யப்படுகிறது என்னை ஏற்றுவதும் இறக்குவதும் மக்களே தவிர சட்டங்கள் அல்ல."

இவ்வாறு காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் திரு ஹெக்டர் கொப்பேகடுவ கூறினார்.

காங்கேசன்துறைப் பட்டின சபை முன்னாள் தலைவர் டாக்டர் சு வே. சீனிவாசகம் தலைமையில் கூட்டம் நடந்தது.

திரு கொப்பேகடுவ மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"எனக்கு ஹெலிகொப்டர் வழங்க மறுக்கப்பட்டது. எனக்கு பாதுகாப்பாக ஆயிரக் கணக்கான படை வீரர்களும் வரவில்லை. இவையெல்லாம் எனக்குத் தேவையில்லை. நான் பயமின்றி உங்களிடம் வருவேன். நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளன் மட்டுமல்ல; சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவுடன் ஒரு பொது வேட்பாளனாக வந்துள்ளேன். இதுவரை 17 மாவட்டங்களுக்கு விஜயம் செய்துள்ளேன்.

[8ம் பக்கம் பார்க்க]

## "டேவிட்சனை விடுதலை செய்க".

(யாழ்ப்பாணம்)

கைதுசெய்யப்பட்ட ஈழமாணவர் பொதுமன்றத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. டேவிட்சனையும் ஏனைய இளைஞர்களையும் உடனடியாக நீதி விசாரணைக்குட்படுத்தி விடுதலைசெய்யவேண்டுமென்று அறவழிப்போராட்டக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (மா)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஒஸ்ரின் மொறிஸ், பொருட்கள் ஏற்றும் (Goods) டீசல் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: V. பாலா, துரை ஐயா அவனியூ, அச்சுவேலி. போன்: 207 (4797

## தேவை

யாழ்ப்பாணம் றோயல் டிஸ்பென்சறிக்கு திடகாத்திரமும், நல்லொழுக்கமுமுள்ள இரவுக் காவலாளி உடன் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 4801

வர்த்தக, வருமானக் கணக்குகள் எழுதுவதில் திறமையும் அனுபவமும் உள்ள கணக்குப்பதிவாளர் தேவை. சகல தஸ்தாவேஜுகளுடனும் உடன் நேரில் வரவும் றோயல்டிஸ்பென்சறி, யாழ்ப்பாணம். 4802

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆசிரியர்க்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முழு விபரத்துடன் உடனடியாக விண்ணப்பிக்கவும். நிர்வாகி, நாவலர் கல்வி நிலையம், சித்தன் கேணி. (4809)


## காலி சம்பவம் விசாரணை நவம்பர் 8ல்

(கொழும்பு)

கடந்த ஜூலை மாதம் 25-ந் திகதி காலி மாநகரசபை எல்லைக்குள் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக இம்மாதம் 11-ந் திகதி காலி நகரசபை மண்டபத்தில் நடைபெறவிருந்த ஆணைக் குழு விசாரணைகள் நவம்பர் மாதம் 8-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்விசாரணைகள் நவம்பர் 8-ந் திகதி காலி குடும்ப நீதிமன்றத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்.

இது தொடர்பாக எழுத்து மூலமான முறைப்பாடுகளை அனுப்ப விரும்புபவர்கள் அதனை இம்மாதம் 29-ந் திகதி வரை அனுப்பலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-வெ)

## கடத்தல் முயற்சி முறியடிப்பு

[மன்னார்]

தலைமன்னார் துறைமுகத்தினூடாக 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கடிகார உபகரணங்களை இந்தியாவுக்குக் கடத்திச்செல்ல முயன்றவர் தலைமன்னார்சுங்க அதிகாரிகளிடம் சிக்கிக்கொண்டார்.

இவர் தலைமன்னார் துறைமுகத்தினூடாக கடிகார உபகரணங்களை கடத்திச்செல்ல முயன்றபோது இவர்மீது சந்தேகங்கொண்ட தலைமன்னார் சுங்க அதிகாரிகள் இவர் கொண்டுவந்த பெட்டியைப் பரிசோதித்தபோது இக்கடத்தல் முயற்சி கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கடத்தல் முயற்சிபற்றி விசாரணை நடத்திய சுங்க அதிகாரிகள் கடத்திச் செல்லப்பட விருந்த கடிகார உபகரணங்களை பறிமுதல்செய்து 2800 ரூபா அபராதம் விதித்தனர். [க]

## இருவர் சித்தி

[அரியாலை

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் ஓட்டோ மோட்டார் பொறியியல் பிரிவில் இரண்டு வருடம் பயிற்சி பெற்ற செல்வன்கள் வை. கனகேசன், ஆர். சிறீஸ்கந்தராசா ஆகிய இரு மாணவர்களும், லண்டன் மோட்டார் பயிற்சித் தொழில் நிலைய இன்ரமீடியட் பரீட்சையில் சித்தி பெற்றிருக்கிறார்கள்.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மேற்படி பரீட்சையின் முடிவுகள் கடந்த வாரம் வெளிவந்தது. [அ]


சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளை

கிளிநொச்சி, எமேசன் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு நவரட்ணம் என்பவரின் மரண சாதனமில்லா சொத்துக்கள் விடயத்தில்

மரணமெய்தியவர் நவரட்ணம் கைம்பெண் புவனேஸ்வரி, எமேசன் வீதி, கிளிநொச்சி.

மனுதாரர்

வழக்கு இலக்கம்: 208/T

எதிராக

1. நவரட்ணம் நக்கீரன்
2. நவரட்ணம் மகள் சிவாஜினி
   (பராயமற்றவர்கள்)
3. நவரட்ணம் மகள் சுபாஜினி, மூவரும் எமேசன் வீதி, கிளிநொச்சி
4. தம்பியையா கந்தநாதன், ஊரெழு கிழக்கு, சுன்னுகம்.
   (1-ம், 2-ம் எதிர்வாதிகள் தமது வழக்கு பாதுகாவலனுக 4-ம் எதிர்வாதி மூலமாக)

எதிர்வாதிகள்

இவ்வழக்கு 1982-ம் ஆண்டு ஆவணி மாதம் 5-ந் திகதி சாவகச்சேரி நீதிபதி உயர்திரு. எம். எச். காரியப்பர் முன்னிலையில் மனுதாரர் சார்பில் அவரின் சட்டத்தரணிகள் பரராஜசிங்கமும், அம்பிகைபாலனும் என்னும் நாமத்தில் செயலாற்றும் திருவாளர்கள் முத்தையா பரராஜசிங்கம், செல்லப்பா அம்பிகைபாலன் அவர்கள் சமுகமாயிருக்க மனுதாரின் மனுவும், சத்தியக்கூற்றும் வாசிக்கப்பட்டு பின்வருமாறு கட்டளை இடப்பட்டுள்ளது.

இக்கட்டளைக்கு மாருன காரணங்கள் ஏதும் இருப்பின் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி அல்லது அதற்கு முன்பாக குறித்த எதிர்வாதிகளால் அல்லது வேறு அக்கறை உள்ளவர்களால் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த காலஞ்சென்ற முருகேசு நவரட்ணத்தின் மரணச்சொத்துக்களுக்கு அவரின் மனைவியாரான குறித்த மனுதார் நிர்வாக தத்துவகாரியாக இத்தால் நியமிக்கப்படுவார்.

மேலும் இக்கட்டளைக்கு மாருன காரணங்கள் ஏதும் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பாக குறித்த 1-ம், 2-ம், 3-ம் எதிர்வாதிகளால் அல்லது அக்கறையுள்ள வேறு எவராலும் காட்டப்பட்டாலன்றி மேற்குறித்த 4-ம் எதிர்வாதி இம்மனு விடயமாக பராயமற்ற 1-ம், 2 ம், 3-ம் எதிர்வாதிகளின் வழக்குக் காவலனுக இத்தால் நியமிக்கப்படுவார்.

1982-ம் ஆண்டு ஆவணி மாதம் 5-ந் திகதி.

மாவட்ட நீதிபதி

தயாரித்தவர்கள்:

பரராஜசிங்கமும் அம்பிகைபாலனும்,

மனுதாரின் சட்டத்தரணிகள். (4787)

அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி


## "இசைநாடகக் கலைஞர்கள் வேறுதுறைகளை நாடும் துர்ப்பாக்கியநிலை"

(யாழ்ப்பாணம்)

'பாரம்பரிய இசை நாடகக் கலைஞர்களை ஒன்று கூட்டி அவர்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தையும், பாரம்பரிய இசை நாடகக்கலையையும் பேணிவளர்க்கவுமே இலங்கை இசை நாடகக் கலைஞர்கள் சங்கத்தை ஆரம்பித்துள்ளோம்' என்று தாவடி தமிழ்க்கலவன் பாடசாலையில் அகில இலங்கை இசை நாடகக் கலைஞர்கள் சங்கத்தினை ஆரம்பித்துவைத்துப் பேசிய மேற்படி சங்க அமைப்பாளரும், இசை நடனக்கலைஞருமான கலைமணி சு. வடிவேல் கூறினார். மேலும் அவர் தமது உரையில் கூறியதாவது:-

'எமது நாட்டில் வேடம் போட்டவர்கள் எல்லாம் நடிகர்களாகிவிடுகின்ற நிலைமையில், தமது முழுநேரத் தொழிலாக இசைநாடகக்கலையினைக்கொண்டு வாழும் சொற்ப கலைஞர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் வாழுகின்றனர். இவர்களோடு இக்கலை அழிந்துவிடும் நிலைமையுள்ளது. ஏனெனில் இத்துறையில் ஈடுபடுவோர் அருகிவருகின்றனர். கலைஞர்களைப் பேணினுல்தான் கலைவளர முடியும். இல்லையேல் அழிந்துவிடும்.'

கூட்ட ஆரம்பத்தில் சட்டத்தரணி சதா. ஸ்ரீநிவாசன் தலைமைதாங்கினுர் கலைஞர் பரம். தில்லைராஜா குத்துவிளக்கேற்றி சங்கத்தை ஆரம்பித்துவைத்தார் நடிகமணி வி. வி. வைரமுத்து இவ்வைபவத்தில் பேசுகையில், 'தமிழ் இசை நாடகக் கலைஞர்களின் வாழ்க்கைக் கஷ்டங்களைக் கண்டு புதியவர்கள் இத்துறையில் ஈடுபடப்பயப்படுகின்றனர்கள். இத்துறையில் கடந்த நாற்பது ஆண்டுகளாக ஈடுபட்டுவந்த பழம்கலைஞர்கள் வாழ்க்கைக்காக வேறு தொழிலைநாடவேண்டி அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய அமைப்பு கலைஞர்களுக்கும், கலைக்கும் வாழ்வளிக்கும்' என நம்பிக்கை தெரிவித்தார்.

கவிஞர் காரை செ சுந்தரம் பிள்ளை உட்பட வேறு பலரும் உரையாற்றினுர்கள். அகில இலங்கைத் தமிழ் இசை நாடகக் கலைஞர்கள் சங்கத்தின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர் சீ. ரி. செல்வராசா, உப தலைவர்கள் ரி. எஸ். பொன்னுசாமிதேசிகர், ப. நற்குணம், இணைச்செயலாளர்கள் கலைமணி சு. வடிவேல். நடிகமணி வி. வைரமுத்து, பொருளாளர் இ. சுந்தரலிங்கம், உப செயலாளர் எஸ் கே. வேலுப்பிள்ளை, 16 பேர் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

அமரர் கலையரசு சொர்ணலிங்கத்தின் மறைவுகுறித்து மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (உ)

## யாழ். இந்து ஆசிரியர் கழகம் பாராட்டுகிறது

யாழ் இந்துக் கல்லூரி வரலாற்றில் தனக்கென ஒரு அத்தியாயத்தை உருவாக்க வைத்து, கல்லூரியின் பல்துறை வாழ்விலும் இன்றியமையாத பாத்திரமாய் கால்நூற்றுண்டு காலத்தை கரைத்துவிட்ட ஒருவர் 24-09-1982 வெள்ளிக்கிழமை தன் உத்தியோகபூர்வமான தொடர்பை முடித்துக்கொண்டார். யா. இ. கல்லூரிச் சமுதாயம் இவர் பிரிவை மிகவிரைவில் உணரத்தான் போகிறது.

''பாலெல்லாம் நல்ஆவின் பால் ஆமோ' என்று தொடங்கும் பாடலே நினைவுக்கு வருகின்றது. தொட்டதெல்லாவற்றையும் செம்பொன்னுக்கும் செம்மை படைத்த இவர் கற்பிக்க, தகுதியற்ற துறையெதுவும் கல்லூரிகளில் இல்லை எனத்தக்கவாறு பல்கலை வல்லுனனுகத் திகழ்ந்த ஆசிரியர் திரு. இ. மகாதேவா அவர்கள் விட்டுச்சென்றிருக்கும் இடைவெளி யாராலும் நிரப்பமுடியாததாகும். ஆங்கிலமா, செந்தமிழா, கணிதமா, விஞ்ஞானமா, மோட்டார்ப்பொறியியலா, மின்னியலா, அன்றி செவி-கட்புலச் சாதனயியக்கமா, சாரணர் இயக்கமா? இவற்றுள் எந்தத்துறைதான் இவருக்குத்தெரியாது. விளையாட்டுத்துறையையும்கூட இந்த மனிதன் விட்டுவைக்கவில்லை. உலகப்புகழ்பெற்ற 'பிரான்ட் லிற்றில், கிங்' என்ற இருவரிடமும் முறையே உடற்பயிற்சியிலும், உதைபந்தாட்டத்திலும் பயிற்சிபெற்ற இவர் யாழ்ப்பாண விளையாட்டுச் சங்கக் காரியதரிசியாக இருந்தபோது சென்னை உதைபந்தாட்டக்கோஷ்டியைமுதன் முதல் யாழ்ப்பாணம் வருவித்தவரும் இவரே.

கல்லூரிச் சுவர்களுக்கப்பாலும் மங்காத புகழ்பரப்பும் மாபெரும் தொண்டனுகவும் திரு. தேவன் அவர்கள் விளங்கினுர். [illegible] நாடக ஆ[illegible]ளனுய் சொல்லின்செல்வனுய், மொழிபெயர்ப்பாளனுய், அறிவிப்பாளனுய் விளங்குகிறுர். இவர் தம் சிம்மக்குரல் கேட்காத விளையாட்டுப் போட்டிகள், நடன, நாடக அரங்கேற்றங்கள் யாழ்ப்பாணத்தில் நடந்ததேயில்லை. திரு. தேவன் அவர்களின் நாடகப்புலமையை மதித்து, கலைக்கழகம் இரு தடவை பரிசில் கொடுத்து பெருமைப்படுத்தியது. யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்கம் 'பக்தமீரா' என்ற நாடகத்தை திரு தேவனைக்கொண்டு எழுதுவித்து, இயக்குவித்து சமயத்துறையில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. அவ்வமயம் இவர் புலமையை வியந்து பாராட்டி 'நாடகாச்சாரியேந்திரன்' என்ற பட்டமும் தங்கப்பதக்கமும் கொடுத்துக்கௌரவித்தது. அண்மையில் அகில இலங்கைக் கம்பன் கழகம் தேவனின் கம்பகாவியப்புலமையைப் பாராட்டி 'சொல்லின் செல்வன்' என்ற பட்டமளித்து பொன்னுடை போர்த்திப் பெருமைகொண்டது.

நல்ல நண்பனுய், ஆற்றுப்படுத்தும் தோழனுய், ஆசிரியனுய் அரும்பணியாற்றிய தேவனுக்கு யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் பல்லாண்டு கூறி, நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

க. சிவராமலிங்கம்
தலைவர்—ஆசிரியர் கழகம்,
யாழ். இந்துக் கல்லூரி.

## வடபகுதியில் ஐக்கியநாணயச் சங்கம் ஆற்றும் பெரும்பணி

[பண்டத்தரிப்பு]

''வடபகுதியில ஐக்கிய நாணய சங்கங்களே இன்று கூட்டுறவு இயக்கத்தின் தத்துவங்களை பின்பற்றி இயங்கி வருகின்றன. கூட்டுறவுத் துறைக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டபோதிலும் கிராகிய மட்டத்தில் இச்சங்கங்கள் இன்றும் சிறப்பாக இயங்கி வருவது எமக்கு பெரிதும் மகிழ்ச்சியை தருவதாக உள்ளது. கடந்த 27 வருடங்களாக இச்சங்கம் சிறப்பாக இயங்கி வருவது அதன் அங்கத்தவர்களின் நேர்மை, ஐக்கியம், பரஸ்பர ஒத்துழைப்பு, ஆகிய பண்புகளை எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது.''

இவ்வாறு யாழ். தேசிய கூட்டுறவுச் சபையின் செயலளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் சில்லாலை மத்திய கூட்டுறவு கடனுதவிச் சங்கத்தின் 27வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் திரு. எம். ஜோசப் தலைமையில் சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சங்க நிர்வாக உறுப்பினர் திருமதி பேர்ளி அத்தனுசியார் பண்டத்தரிப்பு கிராமோதய சபை தலைவியாகவும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவியாகவும் தெரிவு செய்யப்பட்டிருப்பதை பாராட்டி சங்க சார்பில் வரவேற்பு உபசாரம் ஒன்றும் அளிக்கப்பட்டது.

திரு. சிவசுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

இன்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களின் நேரடி ஈடுபாடு எதுவும் இல்லாமையினுலும், கூட்டுறவின் அடிப்படைத் தத்துவங்களுக்கேற்ற முறையில் இயங்காமையாலும் கீழ்நிலையடைந்துகொண்டு செல்கின்றன விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, நேர்மை ஐக்கியம்ஆகியவற்றை கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் அணிகலன்களாகக் கொண்டு செயற்படவேண்டும்.

அண்மையில் ஒரு ஐக்கிய நாணய சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கு நான் சென்றபோது அங்கு சங்கக் கூட்டத்தின் திறப்பை யார் வைத்திருப்பது என்று பெரிய பிரச்னை எழுந்தது. இதனுல் உறுப்பினர் வாக்குவாதப்பட்டு கூட்டம் கலைந்துபோகும் அளவுக்கு தகராறு ஏற்பட்டது. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அறவே இல்லாத காரணத்தால்தான் இதுபோன்ற பிரச்னைகள் எழுகின்றன. இது கூட்டுறவின் இலட்சியத்திற்கு மாறுபட்டதாகும்.''

யாழ் மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜச் செயலாளர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு, திருமதி பேர்ளி அத்தனுசியார் உட்பட பலர் உரையாற்றினர்.

## 'வித்தியாலயத்தின் தரத்தை உயர்த்துக'

[யாழ்ப்பாணம்]

நயினுதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 4ம் தர அதிபரை நியமித்து வித்தியாலயத்தின் தரத்தைஉயர்த்த வழிசெய்யவேண்டும்'' என்று கோரும் தீர்மானம் நயினுதீவு தெற்கு கிராமோதய சபையின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படவுள்ளது.

இக்கூட்டம கிராமோதய சபைத் தலைவர் திரு. வி. ஆர். கே. இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்றது. மேலும் திட்டங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (உ)

## விரைவில் மின்சாரம்

(கரவெட்டி)

வல்வெட்டி எரிச்சோலை மடந்தை, வல்வெட்டி இலக்கணுவத்தை ஆகியபகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கவுள்ளது. இம்மின்சாரத் திட்டத்திற்கென உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கம் 2 லட்சம் ரூபாவை பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

# லெபனனுடன் சமாதானத்தையே இஸ்ரேல் விரும்புகிறதாம்!

## சடலங்களையும், கைதிகளையும் ஒப்படைக்கும்படியும் கோரிக்கை!

ரெல்அவிவ், அக். 11

இஸ்ரேல், லெபனன் அரசு தொடர்பாக வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ கொள்கை விளக்க அறிக்கையில், லெபனனுடன் சமாதான ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள வே தமது நாடு விரும்புகின்றதென்று தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை இரண்டுவாரங்கள் இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட விவாதங்களை அடுத்தே வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் புதிய நிபந்தனைகள் எதனையும் இஸ்ரேல் விதிக்கவில்லை. ஆயினும் லெபனனின் வடபகுதியில் இருந்தும், பெக்கா பள்ளத்தாக்கிலிருந்தும் பாலஸ்தீனர்கள் வெளியேறியபின்னரே தமது படைகளும் லெபனனிலிருந்து முழு அளவிலான வெளியேற்றத்தை ஆரம்பிக்குமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனனுடனன சமாதானத்துக்கு தமது நாடு உழைக்கும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ள அதேவேளை பெய்ரூட்டில் பாலஸ்தீனவீரர்கள் நிலைகொண்டிருந்த தளங்கள், மீண்டும் அவர்களது உபயோகத்திற்காகக் கையளிக்கப்படக்கூடாதென்றும், தெரிவித்துள்ளது. அத்துடன் பெய்ரூட்டில் இடம்பெற்றமோதல்களின்போது மரணமடைந்த இஸ்ரேலிய வீரர்களின் சடலங்களுடன், காயமடைந்த நிலையில் கைதிகளாக வைக்கப்பட்டிருப்போரையும் தம்மிடம் ஒப்படைக்கவேண்டுமென இஸ்ரேல்கோரியுள்ளது. (கி)

### மாஸ்கோ சதுக்கத்திக்கு நேருவின்பெயர்

மாஸ்கோ, அக். 1

மாஸ்கோ நகரில் ஒரு சதுக்கத்திற்கு ஜவஹர்லால் நேருவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நேருபெயர்பொறித்தபலகை அண்மையில் இங்கு விஜயம் செய்த திருமதி இந்திராகாந்தியும் சோவியத் துணைப் பிரதமர் வி. இ. திம்ஷித்ஸும் திறந்துவைத்தபின்னர் பிரபல சோவியத் கவிஞரும், நேருபரிசு பெற்றவருமான ஈ. எம். விஜேகுரோவிம் பாட்ரிஸ் லுமும்பா நட்புறவுப் பல்கலைக்கழக ரெக்டர் வி எஃப். ஸ்தானிசும் உரையாற்றினர்.

ஜவஹர்லால் நேரு சோவியத் யூனியனின் உண்மையான நண்பரென்றும், சோவியத்-இந்திய நட்புறவைவலுப்படுத்துவதற்கு அவர் பெருந்தொண்டாற்றியதாகவும் அவர்கள் கூறினர்.

சோவியத் தலைநகரில் ஒரு சதுக்கத்திற்கு அவர் பெயர் வைக்சப்பட்டிருப்பதானது, இந்த உறவுகள் வெற்றிகரமாக வளர்ந்துவருகின்றன என்பதற்கு அடையாளமாகும் என்று வலியுறுத்தினர்.

திருமதி இந்திராகாந்தி பேசுகையில்; "நேம்மிக்க இந்தச் செயலை இந்திய மக்கள் பெரிதும் பாராட்டுவார்கள் என்றும், அக்டோபர் புரட்சியையும் மாமேதை லெனினையும் ஜவஹர்லால்நேரு வெகுவாகப் போற்றினர் என்றும், சோவியத் மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையே நட்புறவை வளம்படுத்த அவர் அயராது உழைத்தார் என்றும் இந்த நட்புறவானது நம்மிரு நாடுகளுக்கு மட்டுமின்றி மனித சமுதாயம் முழுதுக்குமே நன்மை பயக்குமென்றும் அவர் நம்பினர்'' என்றும் திருமதி இந்திரா காந்தி கூறினர்.

# போலந்தில் இராணுவ ஆட்சி இவ்வருட இறுதியில்நீக்கம்?

வார்ஸோ, அக். 11

போலந்தில் சொலிடாறிற்றி தொழிற்சங்கம் கலைக்கப்பட்டது குறித்து போலந்து அதிபர் ஜெனரல் ஜெருசெல்ஸ்கி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

வார்ஸோவில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே தமது மகிழ்ச்சியைத் தெரிவித்த ஜெருசெல்ஸ்கி, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்களென்று கூறினர்.

போலந்தில் நிலவும் இராணுவ ஆட்சியும் இந்த வருட இறுதியில் நீக்கப்படலாமென்று ஜெனரல் ஜெருசெல்ஸ்கிஊகம் தெரிவித்தார்.

இதேவேளை தலைமறவாக இயங்கிவரும் சொலிடாறிற்றி தொழிற்சங்கவாதிகள் தமது இயக்கம் சட்டபூர்வமானதென்று தெரிவித்துவருகின்றனர். அத்துடன் தமது இயக்கம் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாவது ஆண்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 10ம் திகதி பூர்த்தியாவதை முன்னிட்டு அத்தினத்தில் அரசுக்கெதிராக நான்கு மணி நேர வேலை நிறுத்தத்தில் குதிக்கும்படியும் கேட்டுவருகின்றது. (கி]

### நாளை ரூபவாஹினியில் 'சங்கராபரணம்'

(கொழும்பு)

நாளை புதன்கிழமை இரவு 8-45மணிக்கு ரூபவாஹினியில் 'சங்கராபரணம்' ஒளிபரப்பப்படவுள்ளது. சோமையாஜுலு, மஞ்சுபார்கவி, ராஜலட்சுமி, பேபி துளசி ஆகியோர் நடித்த தெலுங்குத் திரைப்படம் இது.

### திருமதி பூட்டோவுக்கு சிகிச்சை பெற அனுமதிமறுப்பு

இஸ்லாமாபாத் அக் 11

பாகிஸ்தானின் முன்னுள் பிரதமரான ஜனுப் சுல்பிகார் அலிபூட்டோவின் மனைவி நஷ்ரத் பூட்டோவிற்கு வெளிநாடு சென்று சிகிச்சைபெற அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது.

ஜனுபா நஷ்ரத்பூட்டோ தமது நுரையீரலில் புற்றுநோய் பீடித்திருப்பதை காரணங்காட்டி வெளிநாட்டில் சென்று சிகிச்சைபெற தம்மை அனுமதிக்குமாறு கடந்த ஆகஸ்டில் இராணுவ ஆட்சியாளரைக் கேட்டிருந்தார்.

இவரது வேண்டுகோளை ஆராய்ந்த ஆட்சியாளர் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதுடன் பாகிஸ்தானிலேயே உரிய சிகிச்சையைப் பெறும்படி தெரிவித்துள்ளனர். ஆனுலும் ஜனுபா நஷ்ரத் பூட்டோ சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வேண்டிய தன் அவசியத்தை குழுவொன்று ஆராயுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

### அண்ணுமலை பல்கலைக்கழகம்:

# 8 பொறியியல் மாணவர் நீக்கப்பட்டனர்!

சென்னை அக். 11

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த எட்டு பொறியியல் மாணவர்கள் நீக்கப்படவுள்ளனர்.

இப்பல்கலைக்கழகத்தின் 'சின்டிகேட் சபை' பிரச்னையொன்று தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளையடுத்தேஇந்த எட்டு பொறியியல் பீட மாணவர்களும் நீக்கப்படவுள்ளார்.

இத்தகவலை அண்ணுமலைப் பல்கலைக்கழக உப வேந்தர் திரு. சிட்டிபாபு வெளியிட்டார்.

பல்கலைக்கழகப் படிப்பிலிருந்தும் நீக்கப்படவுள்ள இந்த எட்டு மாணவர்களைத்தவிர மேலும் சிலருக்கு இரண்டு வருட காலங்களுக்கு பல்கலைக்கழகப்படிப்பினைத் தொடர்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [கி]

### 350 ரூபா அபராதம்

(சாவகச்சேரி

அனுமதிப்பத்திரமில்லாமலும்மேலதிகமாகவும்பிரயாணிகளை ஏற்றியதாகவும் குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 350 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 82 ஜூலை 24ல் விசுவமடுவைச்சேர்ந்த இராசையா இராசதுரை என்பவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி எம் எச். காரியப்பர் இரு குற்றங்களுக்கும் முறையே ரூ 190, ரூ. 160 அபராதம் விதித்தார். (க]

# இந்திய - ஆப்கான் உறவுகளில் அபிவிருத்தி

புதுடில்லி, அக். 11

ஆப்கான் வர்த்தக அமைச்சின் தூதுகோஷ்டி ஒன்று உத்தியோகபூர்வ விஜயம்ஒன்றை மேற்கொண்டு இந்தியாவுக்கு வந்துள்ளது.

பாரத அரசுக்கும் ஆப்கானிஸ்தானின் வர்த்தகஅமைச்சின் தூதுகோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்கள் நல்லபலனை ஏற்படுத்தியுள்ளன என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகள் மேலும் விருத்தியடையும் என்று ஆப்கான் துணைவர்த்தக அமைச்சர் ஜனுப் அப்துல் சலாம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் ஏற்றுமதி இறக்குமயில் இந்தியா பல ஆண்டுகளாக பிரதான இடத்தை வகித்து வருகிறது. தேயிலை, பருத்தி, ரெயோன் பப்ரிக்குகள், மருந்து வகைகள் சைக்கிள்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்கான பொருட்களை ஆப்கானிஸ்தான் இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்கிறது. பதிலாக இந்தியா பழங்கள், பழவற்றல்கள், மருத்துவ மூலிகைகள், செடிகள் மற்றும் ஆப்கானின் பாரம்பரிய ஏற்றுமதிப்பொருட்களையும் தருவிக்கின்றது.

ஆப்கான் வர்த்தக அமைச்சின் இந்திய வெளிநாட்டு அமைச்சின் தூதுகோஷ்டி காபுலுக்கு விஜயம் செய்துள்ளது. ஆப்கான் வர்த்தகக் குழுவின் பிரதிநிதிகள் இந்திய தேசிய வர்த்தக, தொழில் துறையின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர்.

# லொறியினுல் மோதுண்டவர் அறிவிழந்த நிலையிலனுமதி

[மாவிட்டபுரம்]

இரவு நேரம் சைக்கிளில் வீதியால் வந்தவரை லொறி ஒன்று மோதிவிட்டு ஓடி மறைந்துவிட்டது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கண்மையில் இது நடந்தது.

காங்கேசன்துறைப் பக்கமாகவிருந்து சைக்கிளில் வந்து கொண்டிருந்த தெல்லிப்பழையைச் சேர்ந்த நபர் ஒருவரை மாவிட்டபுரப் பக்கத்திலிருந்து சென்ற லொறி ஒன்று மோதிவிட்டு ஓடி மறைந்ததாகக் கூறப்படுகிறது.

அறிவிழந்த நிலையில் இந்நபர் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுபற்றி காங்கேசன்துறைப்பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### தாராள நிதி உதவி

[சுழிபுரம்]

பண்ணுகம மெய்கண்டான் மகா வித்தியால நெசவுகூடம் மேல்மாடிக் கட்டிடங்கள் ஆகியவற்றுக்கு வேண்டிய நிதிகளை திரட்டிக் கொள்வதில் மகாவித்தியாலய பெற்ருர் ஆசிரியர்கள் நலன் விரும்பியவர்கள் மிகவும் தாராளமாக வழங்க முன்வந்துள்ளனர். மலேஷியாவைச் சேர்ந்த திரு. த. ஆறுமுகம் பிரான்ஸில் வாழும் சி. திருச்செல்வம் பெறியலாளர் செ பரமானந்தம் ஆகியோர்கள் பெரும் [illegible] வழங்க முன்வந்துள்ளனர். மகாவித்தியாலய அதிப[illegible] அபிவிருத்திச் சபையினா ஈடுபட்டுள்ளனர்.

### "ஜெருசலத்தில்

# பாலஸ்தீன கொடியை ஏற்றுவதற்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பேன்" - அரபாத்

டமாஸ்கஸ், அக். 11

"ஜெருசலத்தில் பாலஸ்தீன கொடியை ஏற்றுவதற்கு எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் தொடர்ந்தும் நான் ஆதரவு வழங்குவேன்'' என்று பாலஸ்தீன இயக்கத்தலைவர் ஜனுப் யாஸிர அரபாத் ஜோர்தானில் அம்மான் என்ற இடத்தில் வைத்து தெரிவித்தார்.

1970ம் ஆண்டுக்குப் பின்னர் 'அம்மானில்' முதல்தடவையாக இவ்வாறு தலைவர் அரபாத், ஜோர்தான் மன்னருடன் நடத்திய பேச்சுவார்த்தை கலையடுத்து தமது கருத்தை தெரிவித்துள்ளார். பாலஸ்தீன தலைவருக்கும், ஜோர்தான் மன்னர் ஹுசைனுக்குமிடையிலான பேச்சு வார்த்தைகள் இருதடவைகள் இரண்டு சுற்றுக்களாக நடைபெற்றன.

தலைவர் அரபாத் அம்மானிலுள்ள பாலஸ்தீனக் கட்டிடம் அமைந்துள்ள வளவிலிருந்தே உரையாற்றினர். இவரது உரையைக் கேட்க இரண்டாயிரத்துக்குமதிகமான மக்கள் இங்கு திரண்டிருந்தனர்

யாஸிர் அரபாத் தொடர்ந்தும் தமது உரையில், மத்திய கிழக்கில் பூரணஅமைதியை ஏற்படுத்தவும, இஸ்ரேலின் வேகத்தை தடுக்கவும் தாம் தொடர்ந்தும் பாடுபடப்போவதாகக் குறிப்பிட்டதுடன் தமது முயற்சிகளுக்கு ஜோர்தான் பக்கபலமாக இருக்கின்றதென்று தெரிவித்தார்.

இறுதியாக தமது இலட்சியத்துக்கு வெற்றிகிட்டும் வரை தமது போராட்டங்களும் ஓய்வடையமாட்டாதென்று அவர் உறுதியளித்தார். (கி)

## மணிவாக்கு

அழுக்காறு, அச்சம், பகைமை மனதில் குடி கொண்டுவிட்டால் நோய்கள் உண்மையில் உண்டா கின்றன.

— டாக்டர் அலெக்ஸிஸ் கரெல்

# நமது நோக்கு

## பொருளாதார சீரமைப்பு

இவ்வருட தேர்தல்களில் – ஜனதிபதி தேர்தல், பொதுத்தேர்தல்– ஏற்படும் மிக முக்கிய பிரச்னை பொருளாதாரச் சீரமைப்பு.

இன்றைய அரசியல் கட்சிகள் எவ்வாறு வேறுபட்டிருந்தபோதும் அவை ஜெபிக்கும் மந்திரங்கள் ஒரே மாதிரியானவை – ஜனநாயகம், சோஷலிசம்.

மக்களை மயக்க இவை இன்னும் உதவுமெனநினைப்பது எவ்வளவு மதியீனம்!

நாம் சோஷலிசவாதிகள் என்று பிரத்தியேக உரிமை கூறிக் கூச்சலிடுபவர்களே, தங்கள் ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாதென்று இன்னும் உணர்ந்ததாய்த்தெரியவில்லை.

கடந்த ஆட்சியில் நடைமுறைக்கு வந்தநல்ல பொருளாதார மாற்றங்கள்தாமும் கலப்புக் கொள்கைகளால் பொது மக்கள் தினசரி வாழ்வை கடுமையாகத்தாக்கின, பொருளாதர வரட்சியும், பட்டினி வாழ்வும் நீடித்ததாலும்,ஐக்கிய முன்னணி துண்டுபட்டுத் தடுமாறியதாலும், அரைகுறையில் உருவான அடிப்படை மாற்றம்ஆட்சிக்கு முடிவு கட்டியது.

இன்றைய ஆட்சியில் பெரும முதலாளித்துவ முறையிலேயே அபிவிருத்தி மேற்சொள்ளப்படுகிறது: ஜனநாயகம், சோஷலிசம் பேசஇன்றையஆட்சிக்கு உரிமையில்லையென்று கூறிவிட முடியாது.

தொழில் விருத்தியால், மக்கள் உழைப்பால் நாட்டின் செல்வம் செழிப்படைய, பொதுமக்கள் வாழ்வு வளம்பெற்றால் ஜனநாயக வாழ்வு சோஷலிச வாழ்க்கைமுறை பலம்பெற முடியும்.

ஐந்து வருட ஐ. தே. க. ஆட்சியின் நிலைபரம் என்ன? சோஷலிச முறையை ஓரளவிற்கு ஆதரித்து பெரும் அபிவிருத்தித் திட்டங்களை அரசு தானே பொறுப்பெடுத்திருக்கிறது–மகாவலி அபிவிருத்தி, வீடமைப்பு– ஒரு லட்சம் வீடுகள்– சுதந்திர வர்த்தக வலயம், கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு, கோட்டேயில் நிறுவப்பட்ட பாராளுமன்ற அமைப்பு போன்ற பாரிய திட்டங்கள் அரசின் நேரடி அபிவிருத்தி முறைக்கு உதாரணமாகக்கொள்ளலாம்: இவைக்குண்டான செலவு உண்மையில் பிரமாண்டமானது.

ஆதாயம் அளிக்கும்துறைகளான வர்த்தகம், விவசாயம், தொழில் உற்பத்தி முதலியன தனியார்துறையில் ஒப்படைக்கப்பட்டன; தாராளமான இறக்குமதிக் கொள்கை நால் நாடெங்கும் எல்லாப் பொருட்களும் விற்பனைக்குக் காட்சி அளித்தன.

தொழில், வர்த்தக,வியாபாரத்துறைகளில் வெளிநாட்டு முதலீடு ஊக்குவிக்கப்பட்டது. உள்நாட்டுமுதலாளிகளுக்கும் இவ்வித உற்சாகம் கிடைத்தது.

இவ்வித திறந்த பொருளாதாரத் திட்டத்தையும், தனியார் முதலீட்டையும் ஆதரிக்கும் இலங்கைக்கு சர்வதேச நிதி நிறுவனம், உலக வங்கி, மேனடுகள், ஜப்பான்—இவையெல்லாம் கடனும், மான்யமும் பெருமளவிற்கு உதவின; எங்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மேனட்டு நிபுணர்கள்சேவையும் கிடைத்தது.

இவ்வித கலகலப்பான சூழ்நிலை கடந்த ஐந்து வருடங்களில் காணப்பட்டது உண்மை. மகாவலித் திட்டம் முன்னேறி வருகின்றது. வீடமைப்பு சுறுசுறுப்பாக முன்னேறியது. ஒரு செல்வச் செழிப்பு பரவலாக நாட்டில் காணப்பட்டது; பேசப்பட்டது; ஆனால் அது உண்மையான படமா?

இன்று குத்து விளக்கில் கணக்குப் பார்க்கும் கூட்டம் வந்திருக்கிறது. கடன் வாழ்வில் மாளிகை அமைக்கும் கதை எவ்வாறிருக்கும்? பொருளாதார நெருக்கடி ஜனதிபதி தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்கு முக்கிய காரணமெனவும் கருதப்படுகிறது.

அது என்னவானலும், எங்கள் தொழில், விவசாய உற்பத்தி ஏற்றுமதி இன்று இரண்டாயிரம் கோடி ரூபா பற்றுக் குறையை நிரப்ப வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சென்ற வருட கடன் வட்டியே 350 கோடி ரூபா வென்றால் நிலைமையைக் கற்பனை செய்வது முடியாத காரியமா?

செல்வர்களின் செல்வம் அதிகரித்திருக்கிறது; நாட்டில் எப்பகுதியிலும் காணப்படும் ஆரவாரம் எல்லாம் குபேர வாழ்வு வாழும் இச்சிறு கூட்டத்தினர் எழுப்பும் குரலின் எதிரொலி. வறுமையில் வாடுகிறவர்களின் நிலை கணிசமான அளவுக்கு மாறியிருக்கின்றதா?

வாழ்க்கையை நடத்த உதவும் ஊன்றுகோலே அரசாங்க, தனியார்துறை ஊழியர்களின் சம்பள உயர்வு இன்றைய பொருளாதார நெருக்கடியால் பல புதிய பழைய திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

கைகொடுத்துதவ சித்தமாயிருக்கும் செல்வநாடுகளும் நிதி நிறுவனங்களும் தங்கள் நன்மைக்குரிய நிபந்தனைகள் இடுவது இயல்பு. நாட்டின் ஆட்சி அடிபணிய வேண்டியநிலை.

சுதந்திர நாடுகள், இவ்வித உதவியால் உயிர்தப்ப நினைத்தால்,செல்வந்தநாடுகள் நாட்டின் ஆத்மீகத்தையே அடகு வைக்கும்படி கட்டளையிடும்.

தங்கள் செல்வத்தைப் பெருக்கி எங்கள் சுதந்திரத்தைக் கடனுதவியென்ற சாதனத்தால் பறிக்கும் ஒரு புதிய சூழ்ச்சி உலகெங்கிலும் காணப்படுகின்றது

வல்லரசு ஆதிக்கம் இலங்கையின் கேந்திர ஸ்தானத்தை விளங்கவல்லது; அதில் சிக்கிக்கொள்ளாமல் தப்பி மக்கள் அடிப்படை உரிமைகளைப் பேணவல்ல ஆட்சி உருவாக வேண்டும்.

---

### நாவலர் முளையிட்டார், அருணசலம் வளர்த்தார்

# விளைவுசெய்தார்ராசரத்தினம்!

(நேற்றைய தொடர்ச்சி)

திரு. அருணசலம் அவர்கள் மறைய, கேட்க ஆளில்லாத சமயத்தில் பாதிரிமார் மற்றொரு பாசுபதாஸ்திரத்தை ஏவினர் அது பாழ்செய்வதொரு கல்விச் சட்டம்.

''புதிய பள்ளி மற்றொரு பள்ளிக்கு அரைமைல் தூரத்துக்குள் தொடங்கக்கூடாது. அன்றிப் புதிய சராசரி அறுபது இருக்கவும் வேண்டும். இதுதான் அந்தப் பாழ் செய்யும் சட்டம். இந்தச் சட்டத்துக்கு வலி செய்தார்கள் பாதிரிமார்கள். முளைக்கத் தொடங்கிய சைவப் பள்ளிகள் அப்படியே ஸ்தம்பித்தன, முளைத்தவைகள் ஆற்றமல் பாதிரிமாரிடம் ஒப்பிக்கப்பட்டன. ஐந்து வருடங்களுக்கு மேல் உதவி நன்கொடை பெறமல் வாடிய பள்ளிகள் பல, சைவ உபாத்தியார்கள் எத்தனை காலத்துக்கு வேதனமின்றிப் படிப்பிக்க முடியும். அவர்களும் பாதிரிமாரைச்சரணடை-கிறநிலை நேர்ந்தது இந்த நிலையைத் திரு அருணசலம் அவர்களின் ஆவி சகிக்குமா? அது கீழுறங்கிற்று மற்ருெரு மனிதர் கடலில பாய்ந்தது. அந்த மனிதர் யார்?

### அருணசல உபாத்தியாயரின் வாரிசு:

திரு அருணசலம் வித்தியா பகுதியினரோடு தொடர்பு படுங்காலங்களில், தமிழை இங்கிலிசுப்படுத்தியும், இங்கிலிசைத் தமிழ்படுத்தியும் உபகரிக்கும் வழக்கமுடையவர் ஒரிளங்கனவான். அந்தக் கனவானே அந்த மனிதர், திரு. சு. இராசரத்தினமே அந்தக் கனவான் ஆன மனிதர். அவர் நல்ல அப்புக்காத்து. எவருக்கும் அஞ்சாத செல்லப்பிள்ளை. அவர் வைத்திருந்த பவுண்டன் பேனு மிகப் பெரியது. விலையுயர்ந்தது, அந்தப் பேனு திரு. அருணசலம் அவர்களின் தூண்டுதலால் கல்விச் சட்ட இரகசியங்களிலும் சூழ்ச்சிகளிலும் அடிக்கடி தோய்ந்து முழுகித் திளைத்திருந்தது. எந்தச் சந்தர்ப்பத்தில் எது செய்ய வேண்டுமென்பதை அந்தப் பேனு நன்கு அறியும்.

### சைவ வித்தியா விருத்திச் சங்கம்

திரு, அருணசலத்தைத் தகனஞ் செய்த சுடுகாட்டக்கினி தணிய முன்னமே திரு. இராசரத்தினம் அவர்களின் இதயத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் கருக்கொள்ளத் தொடங்கிவிட்டது.

### இராசரத்தினத்தின் கர்ச்சனை 'எங்கும்சைவப்பள்ளி'

1924 இல் சட்டசபைப் பிரதிநிதியானர் கௌரவ சு,இராசரத்தினம். அச்சபை ஏழு வருடம் நீடித்தது, தமிழர் ஆதிக்கம் அப்போது தலைதூக்கி நின்றது. சேர். பொன். இராநாதன் துரை தனிச் செங்கோலோச்சி அரசு வீற்றிருந்தார். கௌரவ இராசரத்தினத்தின் முதல் மூச்சில் பட்சபாதகமான கல்விச் சட்டங்கள் அத்தனையுந் தவிடுபொடியாயின. கிறிஸ்த பள்ளியின் முற்றத்திலும் சைவப்பள்ளி தோன்றலாம். கிறிஸ்த பள்ளிப்பிள்ளைகள் அல்லாதவது திருநீறணிவும் பிள்ளைகள் புதுப்பள்ளியிற் குடிபுகுதல் செய்யலாம். ஆரம்பித்தநாள் தொடங்கி உதவி நன்கொடை கிடைக்கும். சைவவித்தியா விருத்திச்சங்கம் உதயமாயிற்று எங்கும் சைவப் பள்ளிகள் தோன்றின. சைவப் பள்ளிகளாய்த்தோன்றிக் கிறிஸ்த பள்ளிகளாய் மாறியவை பழையபடி சைவப்பள்ளிகளாயின. மதம் மாறிய ஆசிரியர்களும் பெரும் சைவ பக்தர்களாயினர். திரு. அருணசலம் அவர்கள் தோற்றுவித்த ஐக்கிய போதன ஆசிரிய கலாசாலைப் பங்கு, அருணசலம் அவர்கள் மறையத் தானும் ஒடுங்கத் தொடங்கியது ஐந்தபராயத்தில் ஒடுங்கியது. அரசாங்கம் அதனை எடுத்து நடத்திச் சைவ ஆசிரியர்களைப் பெரும்பாலும் பெருக்கிக்கொடுத்தது. எவ்வளவு பெருக்கியும் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் வேகத்துக்குச் சைவாசிரியர் தொகை போதாமலே இருந்தது

### சைவாசிரிய கலாசாலை

இந்தச் சந்தர்ப்பத்தில் இச் சரித்திர நாயகரின் கனிஷ்டப் புதல்வரான சிவபாதம் அழுகின்ற முகத்தோடு சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் உயிர்நாடியான திரு' இராசரத்தினம் அவர்களுக்கு முறையீடு ஒன்று செய்தார். சிவபாதத்தை உயரம் போதாதென்று அரசாங்க ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்கு எடுக்கவில்லை' இதுதான் முறையீடு

'அருணசலத்தின் மகனுக்குமா உயரம் வேண்டும். இதோ நான் சைவாசிரிய கலாசாலை தொடங்குவேன். நீ வந்து படி' என்றார் இராசரத்தினம், இதனை அந்த இளைஞர் எப்படி நம்ப முடியும். முப்பது வருஷத்துக்கு மேலே தன் தந்தையார் தவமிருந்து பெற்ற ஆசிரிய கலாசாலைக் குழந்தையும் ஐந்தாம் வயசிற் கண் மூடிவிட்டது. இந்த நிலையில் ஒரு சாதாரண பள்ளியும் அன்று பெரிதொரு சைவாசிரிய கலாசாலையை இதோ தோற்றுவிப்பேன் என்றால் யார்தான் நம்புவர்? திரு. இராசரத்தினம் பரிகாசஞ் செய்கின்றார் என்று எண்ணிக்கொண்டு அந்த இளைஞர் போய்விட்டார். இளைஞர் போய் இரண்டு வாரமாவதற்கு முன் 'திருநெல்வேலியில் ஒரு வீட்டில் சைவாசிரிய கலாசாலை ஆரம்பமாகிறது. அதில் வந்துசேர்' என்றொரு கடிதம் அந்த இளைஞரை மதிப்புக்குரிய அருணசல உபாத்தியாயரின் மகனைத் தொடர்ந்தது.

மின்னல் வேகத்தில் திரு. அருணசலம் அவர்களின் கனவுகளை முன் குறிப்பிட்ட பேனமுனை செய்து முடித்தது

### சைவ அநாதசாலை

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மகோந்நத தாபனம் சைவ அநாதசாலை. அது திரு இராசரத்தினம் அவர்களின் உயிர்ப்பு. எத்தனையோ ஆசிரியர்களையும், ஆசிரியை

[8-ம் பக்கம் பார்க்க]

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

---

# மக்கள் கருத்து

## திருமுறை ஓதுதல்

ஆசௌசம், நாறுமுடல், பீற்றல் சரீரம், சலமலப் பேழை இத்தியாதி காரணங்கள் காட்டி தூய்மை கெட்ட இடமாக்கி, அங்கே தேவார பாராயணம் செய்வது பிழையென்கின்றனர் ஒருசாரார்.

சமாதியடைந்துவிட்டார் என்று சொல்லி, உடலுக்கு மலர் மாலை சாத்தி, பட்டு வாசனைத்திரவியங்களணிவித்துக் கோயில் கட்டிக் கும்பிடுகிற உடல்களுமுண்டே! இது ஜீவன்முத்தர்களினுடல் என்ற காரணமோ? ஜீவன் முக்தராவது ஜீவாத்மாவன்றி உடலுமோ?

சுவாசமும் இரத்த ஓட்டமும் நின்றபின் எல்லாப்பிணங்களும் எலும்பும் தசையும் தான். இதில் என்ன வேறுபாடு? சில சில வியாதிகளுக்கடிமையான ஜீவன்களினுடலை தவிர்த்து, மற்றையவெல்லாம், சமாதியடைந்தவர்களின் உடலைப்போன்றனவே. உடனே நாறுமுடல் ஆவதில்லை.

குளித்துத் தோய்த்துலர்ந்த ஆடை தரித்துக் கோயிலுக்குச் செல்லவேண்டுமென்பது விதி. இதிலும் ஆண்கள் அரைக்கு மேல் உடையணிவதில்லை குளிர்ப்பிரதேசங்களில் மேல் அங்கி அணிவதைப் புறநடையாகக் கொண்டாலும், எமது நாட்டில் கால் சட்டை, மேல் சட்டை அணிந்தும்' விவாகமாகாத கன்னிப்பெண்களும் கோயிலுக்குச் செல்வது எந்த ஒழுக்கத்தில் சேர்ந்ததோ? பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கோட்பாடோ? ஒருபடி தாண்டினல் மது, மாமிசம் பாவித்தபின்னும் கோயிலுக்குப் போலாம் என்று வந்துவிடும். இவை நைவேத்யப் பொருளாகவும் கூடும்.

சுவான வைராக்யம், பிரசவ வைராச்யம்போல் மரணமடைந்தவரின் வீடுகளில் ஏற்படுவது இயற்கை இப்படி மனமிளகி இருக்கும்போது தேவாரபாராயணம் சித்தத்தைச் சிவன்பால் செலுத்தக்கூடிய உந்தலைக் கொடுக்கும்.

கழுதைக் கத்தலாயும், காட்டுக் கூச்சலாயும் உச்சரிப்புப் பிழைகளும் இல்லாமலும் உகந்தபண்ணுடன்ஓதினல் அது தவருய் இருக்கமுடியாது.

இ. தர்மலிங்கம்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மாதோட்ட நன்னகர்

மேற்படி தங்கள் பத்திரிகையில் 7 – 10 – 1982 அன்று வெளிவந்த ''மாதோட்ட நன்னகர்'' ஆசிரியர் தலையங்கத்தில் திருக்கேதீச்சரம் என்ற ''தேன் பொந்தை' கைவிடாதீர்கள் என்று ஆறுமுகநாவலர் திருவாய் மலர சைவப் பெரியார் சிவபாதசுந்தரனர் கோயில் அமைத்து அதன் புனருத்தாரண சபையின் முதற்தலைவராக இருந்தார் என்று குறிப்பிட்டிருந்தது.

இவ்விடயத்தில் ஒன்று கூறுவது பொருத்தமாவதென்று நினைக்கின்றேன் ஆறுமுகநாவலர் 'தேன் பொந்தென்று' இருக்கின்றது கைவிடாதீர்கள் என்று கூறியவுடன் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சிவதம சீலர் சி மு.பசுபதிச் செட்டியார் அவர்கள் பல நாட்டுக் கோட்டைச் செட்டி மார்களையும் கேதீச்சரம் அழைத்துச் சென்று காணி வாங்கி புதிதாக சிறு கோபால் அமைத்து வழிபட்டனர்.

கிணறு வெட்டி பார்த்த போது அவர் கண்டெடுத்த சிவலிங்கம் இன்று வெடிப்புற்ற நிலையில் சுற்றுப் பிரகாரத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில் சைவப் பெரியார் சு சிவபாத சுந்தரனர் திருப்பணிச்சபையமைத்து திருப்பணிகளை மேற்சொண்டார். இச்சிவ பணி என்றும் நிலைத்திருக்கும்.

முத்துக்குமாரன்
செட்டியார்
சிவபசுபதி

## ★ ஜனுதிபதி தேர்தல்களம்

''8 ருத்தல் தானியம் தருவதாகக் கூறி

# ஆட்சிக்குவந்த ஐக்கியதேசியக்கட்சி அரிசிக் கூப்பன்களை பறித்தது''

### நவசமசமாஜக்கட்சிப் பொருளாளர் கூறுகிறுர்

(யாழ்ப்பாணம்)
''எட்டு ருத்தல் தானியம் தருவதாக மக்களுக்கு வாக் குறுதி தந்து ஆட்சிக்கு வந்த ஐக்கியதேசியக்கட்சி மக்க ளிடம் இருந்த அரிசிப் பங்கீட் டுப் புத்தகங்களைப் பறித்தது மட்டுமல்ல பண மதிப்பை இறக்கி ஏழைமக்களை பட்டினி போட்டது.

இலங்கை நவசம சமாசக் கட்சியின் அரசியல் குழு உறுப் பினரும் கட்சியின் பொருளா ளருமான திரு. லீனஸ் ஜயத் திலக முத்தையன் கட்டு கலைமகள் சனசமூக நிலையமுன்றலில் நடந்த தேர் தல் பிரசாரக்கூட்டத்தில் பேசு கையில் தெரிவித்தார். திரு. வாசுதேவநாணயக்காராவுக்கு ஆதரவுகோரும்முகமாக திரு. இ. திருநாவுக்கரசு தலைமை யில் இக் கூட்டம் நடைபெற் றது.

திரு. லீனஸ் ஜயத்திலக்கா தொடர்ந்து பேசுகையில், 1977, 1979, 1981ல் நடந்த மூன்று இனக்கலவரங்களில் கொலை, கொள்ளை, சிறை, சித் திரவதை, கற்பழிப்பு போன்ற கொடுமைகளுக்கு தமிழ்மக் கள் ஆளாக்கப்பட்டனர். இவற்றிற்கு ஜே. ஆர். ஜெய வர்த்தனவின் அரசு காரண மாகும். இந்நிலையில் தமிழ்மக் களின் வாக்கை கேட்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெட்கமில் லையா?

கொல்வின் ஆர். டி சில்வா, கெக்டர் கொப்பே கடுவ, விஜேயவீர, குமார் பொன் னம்பலம் ஆகியோரை தமிழ் மக்கள் ஆதரிப்பதற்கு எந்த வித காரணமுமில்லை. இவர் கள் தமிழ்மக்களின் இன்னல் களில் எப்போதாவது குரல் கொடுக்கவில்லை; போராட வில்லை.

1978-ல் காசி ஆனந்தன் சேனதிராசா போன்றவர்களை விடுதலை செய்யுமாறு குரல் கொடுத்தவர் வாசுதேவ நாண யக்கார மட்டுமே. அன்று தொடக்கம் இன்று மாண வன் டேவிற்சன் விவகாரம் வரை குரல்கொடுப்பது வாசு தேவா மட்டுமே. இதை தமிழ் மக்களின் மனச்சாட்சி சொல் லும். நவசமசமாசக்கட்சி மட் டுமே இன்று தமிழ்இனத்தின் போராட்டங்களுக்கு குரல் கொடுக்கிறது.

தமிழ் மக்கள் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குஎதி ராக போடும் மூன்று வாக்குக ளிலும் முதலாவது வாக்கை நவசமசமாசக் கட்சி வேட்பா ளர் திரு. வாசுதேவ நாணயக் காராவுக்கே போடக்கடமைப் பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலாளர் திரு ஆ. க. அண்ணுமலை திரு வெ திருநாவுக்கரசு ஆகியோரும் பேசினர். (வண். நிரு.)

''குமாருக்கு அளிக்கும் வாக்கு

# தனிநாட்டுக் கோரிக்கைக்கு மாறுகக் கணிக்கப்படும்''

[யாழ்ப்பாணம்]
''பெரும்பான்மை இனத்த வரால் வழி நடத்தப்படும் சகல கட்சிகளும் பேச்சு ஒன் றுகவும் செயல்கள் வேறுக வும் செயல்படுகின்றன. இக் கட்சிகள் தமக்குள் ஒன்றோ டொன்று மோதிக்கொண்டா லும், தமிழ் பேசும் மக்களை நசுக்கி, அடக்கிஒடுக்கி ஆள்வ தில் ஒற்றுமையாகவே இருக் கின்றன''

இவ்வாறு கைதடி மேற்கு கந்தசாமி கோவில் முன்றலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிக் கருத்தரங்கில் உரையாற்றிய சாவகச்சேரித் தொகுதி த. வி. கூ. அமைப் பாளர்களில் ஒருவரான திரு ஏ.கே.இராமலிங்கம் கூறினுர்

இக் கருத்தரங்கில் சாவகச் சேரி நகரசபைத் தலைவர் திரு. சி. க. மயில்வாகனம் கருத் துரை வழங்குகையில் ''ஜனுதி பதி தேர்தல் வேட்பாளர்க ளில் ஒருவவரான திரு குமார் பொன்னம்பலம் தமிழ ஈழத் திற்கான சர்வஜன வாக்கெடுப் பாக இத்தேர்தலைத்த தாமும் தமது கட்சியான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் கொள்வதாகப் பிரச டனம் செய்துள்ளார். இக் கோரிக்கைக்குத் தமிழ் மக்கள் 1977-ல் தமது ஒப்புதல்களை முழுமையாக வழங்கியுள்ளார் கள். மீண்டும் ஒப்புதல் பெறு வதாகக்கூறி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவது பய னற்றதாகும்'' என்றுர்.

''ஜனுதிபதி தேர்தலில் திரு குமார் பொன்னம்பலம் வேட் பாளராக வந்துள்ளது தமிழ் மக்களின்ஒற்றுமையை சிதைக் கும் ஒரு நடவடிக்கையாக கும். இவருக்கு அளிக்கும்வாக் குகளைக் கொண்டு கடந்த 34 ஆண்டுகளாக தமிழ்தேசிய இனத்தை அழித்துவரும் பேரின வாதிகள் தனிநாட்டுக் கோரிகைக்கு இன்று ஆதர வில்லையென பிரசாரம் செய் சொல்லே உதவும்'' என்றும் அவர் கூறினுர்.

திரு. வி. எஸ். துரைராசா பேசுகையில் இன்று தமிழ் தேசிய இனத்தை ஒழித்துக் கட்ட முனைனிற்கும் பொது எதிரிகளே இத் தேர்தலில் போட்டியிடுகிறனர் என்றுர்.

கைதடி தெற்குக் கிராம சேவை அலுவலர் பிரிவு தமி ழர் விடுதலைக் கூட்டணிக்கிளை யின் புதிய நிர்வாகளாகப்பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்தலைவர் ஆக சின்னத் தம்பி, உப தலைவர்கள்; வே. குமாரசாமி, க. கந்தையா, செயலாளர்; ப செலத்துரை உபசெயலாளர்; வே. சின்னத் தம்பி, பொருளாளர் ச கி ஜெகதீஸ்வரன் 9பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு பெற்றது. (உ)

## ''தேர்தலைப் பகிஷ்கரிப்பது ஜே. ஆருக்கு ஆதரவாகும்''

[யாழ்ப்பாணம்]
தமிழ்மக்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பது ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கு உதவியாக முடியும், யாழ். மாவட்டசபைத் தேர்தலில் நடைபெற்ற சம்பவங்கள் இடம்பெறவே உதவும்''

ஊர்காவற்றுறை சுதந்திரக் கட்சிக் கிளை ஆலோசனைக் கூட்டம், அமைப்பாளர் திரு. ப. கதிரவேலு தலைமையில் நடைபெற்றபோது திரு. அ. யோ. பூராசா மேற்கண்ட வாறு கூறினுர். அவர் மேலும் கூறியதாவது:

''தமிழ் மக்கள் ஜனுதிபதி தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு. கொப்பே கடுவவுக்கு ''வாக்களிப்பதால் தமிழ்ஈழக் கோரிக்கை பாதிப் படையாது.

''உணவுக்கு ஊதியம் போதவில்லையெனக்கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழி லாளர்களை இந்த அரசு வேலை நீக்கம் செய்துள்ளது. நாட் டில் அடிக்கடி இனக்கலவரங் களுக்கு இடமளித்தது.

''பயங்கரவாத தடைச்சட் டத்தை நீக்குவேன் என்று கூறும் திரு.ஹெக்டர்கொப்பே கடுவவைத் தமிழ்மக்கள் ஆத ரிக்கவேண்டும்.

முதலில் ஜனுதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவைத் தோற் கடிக்கவேண்டும். அடுத்த முடிவைப் பொதுத்தேர்தலில் பார்க்கவேண்டும். (அ)


## விற்பனவுக்கு

29 ஸ்ரீ 6615 மினி பஸ்
29 ஸ்ரீ 6941 E L F வான்
23 ஸ்ரீ 1756 பஸ்
35 ஸ்ரீ 595 வான்
24 ஸ்ரீ 3508 லொறி
29 ஸ்ரீ 5888 இசுசு ஜேர்னி
3 ஸ்ரீ 5965 மொறிஸ் மைனர் கார்
27 ஸ்ரீ 2093 B M C வான்
22 ஸ்ரீ 1144 லொறி

மேற்கூறப்பட்ட வாகனங்களுக்கான விண் ணப்பங்கள் 20-10-82ம் திகதிவரை ஏற் றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு:
சட்ட அதிகாரி
த பினுன்ஸ் கம்பனி லிமிட்.
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம் போன்: 23680
TFC


# தமிழ்மக்கள் அமைதியாகவாழும் சூழலை ஏற்படுத்த அரசுதவறிவிட்டது!

### செய்தியாளர் மாநாட்டில் ஹெக்டர்

''அரசாங்கம் தனது அதிகா ரத்தின் துணையுடன் ஜனுதிப தித் தேர்தலில் மக்களைக் கவ ரப்பார்க்கின்றது ஆனுல் மக்க ளின் ஆதரவு ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சிக்கே பெருமளவில் கிடைத்து வருகின்றது. இந்த ஆதரவை நான் யாழ்ப்பாணத் தில் விஜயஞ் செய்த இடங்க ளிலும் பெறக் கூடியதாக இருந்தது''.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந் திக்கட்சி ஜனுதிபதித் தேர் தல் வேட்பாளரான திரு. ஹெக்டர் கொப்பேகடுவ தமது வடபகுதி விஜயத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பு முன்னர் நேற்றுக்காலை நடத்திய செய்தியாளர் மகா நாட்டில் தெரிவித்தார்.

திரு. ஹெக்டர் கொப்பேகடு வாவிடம் யாழ்ப்பாணத்தில் அவருக்குக் கிடைத்த வரவேற் புப்பற்றிக் கேட்டபோது ''நான் எதிர்பார்த்திராத அளவு வரவேற்பு யாழ் மக்க ளிடமிருந்து எனக்குக்கிடைத் தது. இம்மக்களில் பெரும் பாலானவர்கள் விவசாயிகளே. எமது கடந்த அரசாங்கத்தில் அவர்கள் தாம் அனுபவித் சலுகைகளையும் பெற்ற லாப ளது பிரச்னைகளை நன்கறிந்து அவற்றை சுமுகமாக தீர்க்கும் சூழ்நிலையை ஏற்படுத்துவதே நல்ல பயனை அளிக்கும். நான் பதவிக்கு வந்தால் நிச்சயம் இத்தகைய ஒருசூழ்நிலையை உருவாக்குவேன்'' என்றுர்.

### தெற்கில்

தெற்கில் சில பௌத்த குருமார்கள் அரசாங்கத்தின் முக்கிய அலுவல்களை பௌத் தர்களே கவனிக்கவேண்டு மென்றும் இந்த நாடு ஒரு பௌத்த குடியரசாக மாற்றப் படவேண்டுமென்றும் கோரிக் கைகள் சிலவற்றை முன்வைத் துள்ளார்கள் இவர்களுடன் இந்த கோரிக்கைகள் குறித்து ஆராய உங்களுடைய சிரேஷ்ட அங்கத்தவர்களில் ஒருவரான திரு தினேஷ் குணவர்த்தனு வையும் நியமித்துள்ளீர்கள். எனவே இந்த கோரிக்கைகள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?'' என்றேன்.

இதற்கு திரு. ஹெக்டர் பதி லளிக்கையில் ''இவ்விஷயம் உண்மையானதுதான் தற் போதைய அரசாங்கத்தவரால் பௌத்தகுருமார்கள் சிலர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்

சந்திப்பு: பா, அனந்தகிருஷ்ணன்

களையும் என்னிடம் எடுத்துக் கூறியதுடன் இந்தநிலை மீண் டும் ஏற்பட எமது கட்சி பத விக்கு வரவேண்டுமென்பத னையே விரும்புகின்றனர்'' என்றுர்.

### மிளகாய் வெங்காயம் மாலைகள்

''எனது யாழ்ப்பாண விஜ யத்தின் போது பதினெரு தொகுதிகளில் 10 கூட்டங்க ளும், 3 பொதுக்கூட்டங்களும் நடத்தப்பட்டன. இவை யாவற்றிலும் பொதுமக்கள் பெருமளவில் திரண்டிருந்த னர். அத்துடன் வெங்காயம், மிளகாய் போன்ற உப உண வுப் பொருட்களால் புனையப் பட்ட மாலைகளையும் எனக்கு சூட்டினுர்கள்'' என்றுர்.

இக்கூட்டத்தில் குறுக்கிட்ட கொப்பேகடுவவின் ஆதரவா ளர் ஒருவர் ''இவ்வாறு வெங் காயம், மிளகாய் ஆகியவற் றுல் புனையப்பட்ட மாலைகள் இவருக்கு இரண்டு மாதங் களுக்கு இப்பொருட்களை வாங்கவேண்டியதன் அவசி யத்தை தவிர்ந்துள்ளது'' என்றுர்.

### பழைய நிலை

யாழ்ப்பாண விவசாயிகளின் தற்போதைய நிலை குறித்து மிகவும் கவலை தெரிவித்த திரு. கொப்பேகடுவ தாம் பத விக்கு வரும் பட்சத்தில் முன்பு இவ்விவசாயிகள் அனுபவித்த வாழ்க்கையைமீண்டும் அமைத் துக்கொடுப்பதாகவும் இறக் குமதிகளை நம்பியிருக்கும் நிலையை மாற்றியமைக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

### தமிழர்நிலை

இன்று தமிழ்மக்களுக்கிருக் கும் பிரச்னைகள குறித்த உங்க ளுடைய அபிப்பிராயம்என்ன? என்று நான் கேட்டபோது 'தமிழ் மக்கள் மத்தியில் பிரச்னைகள் இருந்து வருவது உண்மைதான். ஆனுல் இப் பிரச்னைகளை நீக்கி அவர்களை அமைதியாக வாழச்செய்யும் சூழ்நிலையை இந்த அரசாங்கம ஏற்படுத்தத் தவறியுள்ளது. இன்றைய நிலையில தமிழர்க

இவ்வாறு பாதிப்படைந்தவர் கள் தாம் மேலும் பாதிப்படை யக்கூடாதென்பதற்காகவே இத்தகைய கோரிக்கைளை முன் வைத்துள்ளனர். ஆனுல் நாம் இவற்றை முற்று முழுதாக ஏற்றுகொள்ளப் போவ தில்லை. அவர்களின் உண்மை நிலையினை அறிந்தே ஆவன செய்வோம்'' என்றுர்.

### கலுகல்ல விவகாரம்

முன்னர் உங்களுடையகட்சி யில் பெரும்புள்ளியாகவிருந்த முன்னுள் அமைச்சர் கலுகல்ல உட்பட பலர் ஐ. தே காவில் சேர்ந்துள்ளனர். இவர்களைப் பற்றி ஏதும் கூறுவீர்களா? என்று நான் கேட்டபோது அப்போது எனக்கருகிலிருந்த சிங்களத் திரைப்பட நடிகரும் ஸ்ரீ, ல. சு. க. முக்கியஸ்தர் களில் ஒருவருமான திரு. விஜயகுமாரதுங்க சிரித்துக் கொண்டே திரு. கலுகல்ல ஏற்கனவே எம்மிடமிருந்து பிரிந்து விட்டார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றுர்.

இதுபற்றி திரு. கொப்பே கடுவ விளக்கம் தருகையில் திரு. கலுகல்ல ஸ்ரீ ல சு. கட்சியில் அங்கம் வகிப்போ ரின் ஆதரவைப் பெருமளவில் இழந்துள்ளார். அவரது தொகுதியான கேகாலையிலும் அவரது ஆதரவாளர்கள் பலர் அவரைப்பிரிந்து எமக்கு ஆத ரவளிக்க முன்வந்துள்ளனர். இந்த நிலையில் செய்வதறியா மலேயே ஐ. தே க வில் அவர் சேர்ந்துள்ளார். ஆனுல் அக்கட்சி அவரை உரிய முறையில் ஏற்றுக்கொள்ளு மென்பது சந்தேகமே என்றுர்.

### வீடற்றவர்

''இந்த பேட்டியை முடித் துக் கொண்டு திரு. கொப்பே கடுவ விடைபெற்றுச் சென்ற தும் என்னிடம் வந்த அவரது ஆதரவாளர் ஒருவர் திரு. கொப்பேகடுவ நேர்மையான வர். இருப்பதற்குக் கூட சொந்த வீடற்றவராக இருக் ன்றுர் தற்போது இவர் வாடகை வீடொன்றிலேயே இருந்து வருகின்றுர் என்று கூறினர்.

# "தமிழ் ஈழ ஆணையை மக்களிடம் எத்தனை முறை கேட்பது?

## சிங்களக் கட்சிகள் ஒரே குட்டையில் ஊறியமட்டைகள்!"

### ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்பு பற்றி கூட்டணித்தலைவர் 'சிவா' விளக்கம்

(கொண்டாவில்)

"இப்பொழுது நடைபெற இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களைப்பொறுத்த வரையில் பாதிக்கப்போவதில்லை. இது சிங்கள மக்களுக்கான ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கின்றதேர்தலே ஆகும். இதனை ஜனாதிபதியே ஒப்புக்கொண்டுள்ளார். யாழ்ப்பாணக் கூட்டத்தில் பேசும்பொழுது நீங்கள் எமக்கு வாக்களிக்கமாட்டீர்கள் எனது மக்கள் வாக்கு மூலம் மீண்டும் ஜனாதிபதியாவேன் என்று கூறினார். இதுவே இந்நாட்டில் தமிழ் சிங்கள மக்கள் என்ற இரண்டு இனம் இருக்கின்றது என்பதை ஜனாதிபதி ஒப்புக் கொண்டதற்கு சமனாகும். நாம் திருகோணமலையில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தலில் அபேட்சகரை நியமிப்பதில்லையென்று தீர்மானித்தோம். அடுத்து நல்லூரில் நடைபெற்ற கூட்டத்தில் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ற முடிவையெடுத்தோம், இம்முடிவுகள் முற்று முழுதாக சரியானவையாகும்."

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவரும் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி நல்லூர் தொகுதி செயலகத்தில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலையென்ன என்ற தலைப்பில் கருத்தரங்கொன்று திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

#### கிழக்கும் பகிஷ்கரிப்பும்

நல்லூர் எம். பி. திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் "கிழக்கு மாகாணத்தைப்பொறுத்த வரையில் பகிஷ்கரிப்பு சம்பந்தமாக சில விசேட காரணங்கள் கூறப்பட்டன. அவை கூட்ட பொதுச் சபையின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டே பகிஷ்கரிப்பு முடிவு எடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த ஜனாதிபதி கேட்டார் என்னுடன் பேச்சுவார்த்தைக்கு வருகின்ற தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஏன் என்னை இங்கு அழைக்கவோ? வரவேற்கவோ கூடாது? என்று அவரை அழைப்பதற்கு அவர் என்ன எமது அண்ணன் தம்பியா? அன்றி மாமன் மச்சானா? அன்றிக்கல்யாண வீடா இங்குநடக்கிறது?" எமதுபகுதிகள்யாவும்தீயினால்அழிக்கப்பட்டது. மக்கள் துன்புறுத்தப்பட்டனர். அப்பொழுது கூட நாட்டுத்தலைவர் என்ற முறையில் யாழ்ப்பாணம் வராதவர் இப்போது ஜனாதிபதி தேர்தலுக்காக யாழ்ப்பாணம் விஜயம் செய்து பழைய விடயங்களையும் தேவையில்லாத விடயங்களையும் கூறியுள்ளார்.

தனது தந்தையோ மாமன் சேர். பொன் இராமநாதனை வண்டியில் வைத்து தள்ளிச் சென்றதாகவும் அவருக்காக வாக்குக் கேட்பதாகவும் கூறினார். ஆனால் இவர் எச்சந்தர்ப்பத்திலும் இன்றைய நிலைபற்றிக்கூறவில்லை. நாம் பலமுறை பாராளுமன்றத்திலும் அவருடன் மாவட்ட அபிவிருத்திச் சபை அதிகாரம் பற்றியபேச்சு வார்த்தை நடாத்திய போதிலும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும்படி கூறினோம். அதற்கு இன்று வரை எதுவித பதிலும் எச்சந்தர்ப்பத்திலும் கூறப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் வீடுகள் தீயிடப்பட்டது. பொதுசன நூலகம் தீயிடப்பட்டது, கடைகள் தீயிடப்பட்டது. இவற்றையெல்லாம் கட்டிக்கொள்ளலாம். ஆனால் உயிரிழந்த பொலிசார் ஆயுதப்படையினர் உயிரை மீட்க முடியுமா என்று சுன்னாகத்தில் ஜே. ஆர். கேட்டார். எம்மவர்களான இன்பம் பாலஜோதி, செல்வரத்தினம் இன்னும் எத்தனையோ இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டார்களே அவர்களை மீளப் பெறமுடியுமா? என்று நான் கேட்கிறேன்.

#### மாவட்ட சபை பற்றி கதைத்தோம்'

"கடந்த இரண்டு மாதங்களாக நாம் அரசுடன் மாவட்ட சபைகளுக்கான அதிகாரம் பற்றிக் கதைத்தோம். அதிகாரம் யாவும் வர்த்தமானி மூலம் வெளியிடுவதாக ஜனாதிபதி கூறினார். ஆனால் அவை பற்றி இன்று வரைக்கும் எவையும் வெளியாகவில்லை. இவைபற்றி எதனையும் யாழ்ப்பாணம்வந்த போதும் கூறவில்லை. ஜனாதிபதி சேர். பொன். இராமநாதன் பற்றிக் குறிப்பிட்டார். அவர் ஏன் டொனமூர் அரசியல் அமைப்பை ஏற்கவில்லை? இறுதியில் ஏன் தமிழ் மக்களுக்கென தனிக்கட்சியொன்று அமைக்கப்பட்டது என்பதை பற்றியும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியிருக்கவேண்டும்.

"ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூறலாம் அமிர்தலிங்கம் நண்பர் என்று ஆனால் திரு. அமிர்தலிங்கம் அவரை எச்சந்தர்ப்பத்திலும் நண்பராகக் கொண்டதும் இல்லை, கூறியதும் இல்லை. ஜனாதிபதி கூறுகின்றார் நான் சகல தொகுதிகளுக்கும் பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டம் மூலம் 25 இலட்சம் ரூபாவை தொகுதி வேறுபாடு இன்றி ஒதுக்கிக் கொடுக்கின்றேன் என்று இது காலஞ்சென்ற திரு. என். எம். பெரரா நிதிமந்திரியாக இருக்கும் போது கொண்டுவரப்பட்ட திட்டமாகும். அப்பொழுது இருபத்தைந்து இலட்சத்துடன் எவ்வளவோ விடயங்களை சாதிக்கமுடிந்தது. ஆனால் இப்பொழுது இத்தொகை மூலம் என்ன செய்ய முடியும்.?

#### எமக்கு ஒரு தொகை; அவர்களுக்கு ஒரு தொகை

எமக்கு கிடைக்கும் இத்தொகை மூலமே எமது தொகுதி பாடசாலைக் கட்டிடங்கள், மின்சார வசதி, நீர் விநியோக வசதி, முதலியவைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. ஆனால் எமது தவிர்ந்து அவர்களின் தொகுதிகளில் இருக்கும் தனிப்பாடசாலைகள் ஒவ்வொன்றிற்குமே பெரும் தொகையான பணம் வழங்கப்படுகின்றது கடந்த வரவு செலவுத் திட்டத்தில் ஆனந்தா கல்லூரிக்கு நாற்பது இலட்சமும், றோயல் கல்லூரிக்கு 37இலட்சமும், நாலந்தா கல்லூரிக்கு 25 இலட்சத்திற்கு மேலும் வழங்கப்பட்டுள்ளது. இதேபோன்று எமது பகுதி எல்லாத்துறைகளிலும் அரசினால் புறக்கணிக்கப்படுகின்றது.

முன்னையஆட்சியாளர்களின் காலத்தில் எம் விவசாயிகள் விவசாயப் பொருட்களுக்கு கூடிய விலையைப் பெற்றது உண்மை. இதற்குக் காரணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர். எம்மவர் மீது கொண்ட அன்பு பாசத்தினால் இதனை செய்யவில்லை. அந்நிய நாட்டுச் செலாவணியை அன்றைய அரசு பெற முடியாமையினாலேயே இறக்குமதியைத் தடை செய்தது இதனையே தொடர்ந்தும் ஆட்சிக்கு வந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செய்யும் என்று யாரும் எதிர்பார்க்கத்தேவையில்லை. 1972ம் ஆண்டு இவர்கள் கொண்டு வந்த அரசியல் திட்டம்தான் எமக்கு இருந்த சில உரிமைகளையும் பறிக்கக் காரணமாக அமைந்தது இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடுகின்ற திரு கொப்பேகடுவ மிகவும் துவேசியாக இருந்தார். இவர் கடந்த அரசில் காணி மந்திரியாக இருக்கும்போது காணி உச்சவரம்புச்சட்டத்தைக்கொண்டு வந்தது. இந்தியத் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைப் பறிக்க வேண்டுமென்ற ஒரே நோக்கிலேயே இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டது. இரண்டு கட்சிகளையும் எடுத்துப்பார்க்கின்றபோது ஒரேகுட்டையில் ஊறியமட்டைகள்.

#### றோகணவின் முதலைக் கண்ணீர்

"மக்கள் மத்தியில் சிறிய அளவில் செல்வாக்கை கொண்டுள்ள கட்சிகள் பற்றியும் குறிப்பிடவேண்டும். மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர் திரு. றோகண விஜேவீரா கூறுகின்றார். தமிழ் மக்கள் மத்தியில் பிரச்னை உண்டு.

7ம் பக்கம் பார்க்க)

மற்றுமொரு பொன்னான சந்தர்ப்பம்




கோல்ட் ஸ்டார்
20" வர்ணத் தொலைக் காட்சி

சிறப்பு அம்சங்கள்:
- துரித இயக்கப் படக் குழாய்... நான்கு விநாடிகளில் படமும் ஒலியும் கிடைக்கின்றன. சூடேற வேண்டிய அவசியமில்லை.
- தன்னியக்க வர்ணக் கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் வேறுபடும் வர்ணப் படங்களின் செறிவு தானாகவே தரப்படுத்தப்படுகின்றது.
- காந்தவியல் தலையீட்டினால் வர்ணப் படத்தில் கறைகளைத் தன்னியக்க "டிகோஸர்" சாதனம் போக்குகின்றது.
- 1 வருடகால உத்தரவாதமும் விற்பனைக்குப் பின் பராமரிப்புச் சேவையும்.
- அடக்கமான அளவு-50 செ.மி; எங்கும் வைக்கக்கூடியது.

கோல்ட் ஸ்டார்
வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை வாங்குங்கள்—நிகரற்ற செயற்திறன், நிகரற்ற விலை.

ஏகமுகவர்கள்:
பான் ஏசியா லிமிட்டெட்

விற்பனை நிலையங்கள்:
கொழும்பு-172, கெய்சர் வீதி, கொழும்பு 11. தொலைபேசி: 26598, 22376
காட்சியறை; 666, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 589794
திருகோணமலை- 57, தபால் நிலைய வீதி, திருகோணமலை.
யாழ்ப்பாணம்- 95, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7697
நாட்டிலுள்ள ஏனைய பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

## டேவிற்சன் பிரசுரத்தில் என்ன தவறு?

### 'யோகேஸ்' கேட்கிறார்

(கோண்டாவில்)

"கௌதகொட்டியா என்ற நூலை அமைச்சர் சிறில் மத்யூ பாராளுமன்றத்தின் வாசலில் வைத்து அங்கு நின்றறு பொசாருக்கு கொடுக்கலாம் என்றால்; தம்பி டேவிற்சன் வெளியிட்ட பிரசுரத்தில் உள்ள பிழை என்ன? சிறில் மத்யூ வழங்கிய கௌத கொட்டியா என்ற நூல் இனக் கலவரத்தையோ அன்றி இனப்பிரச்னையையோ ஏற்படுத்தமாட்டாது என்று கருதப்படும் சந்தர்ப்பத்தில்; இளைஞன் டேவிட்சன் கொலைகொண்ட இன்பம்செல்வரத்தினத்தின் படத்தையும் எரிந்த பொதுநூல் நிலையத்தின் படத்தையும் சேர்த்து அச்சிட்டு வெளியிட்ட துண்டுப் பிரசுரம் எவ்வாறு இனத்திடையே பிரச்னையைத் தோற்றுவிக்கும் என்று கூற முடியும்?"

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

"ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் இன்றைய நிலை" பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில்தான் யாழ். எம். பி. மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் கூறுயதாவது:-

"இன்று இளைஞன் டேவிற்சன் பனகொட ராணுவமுகாமில் துன்புறுத்தப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்படவும், ஏனைய இளைஞர்கள் விசாரணை எதுவுமின்றி சிறைகளில்வைக்கப்படவும் காரணம் பயங்கரவாத தடைச்சட்டமேயாகும்.

"பகிஷ்கரிப்பு முடிவு; முன்பின் சிந்திக்காமல் எடுத்த முடிவாக யாரும் கொள்ளக் கூடாது. நாம் திருகோணமலை நல்லூர் ஆகிய இடங்களில் நன்றாகக் கலந்தாலோசித்து சிந்தித்தே இம்முடிவை எடுத்துள்ளோம்.

"இப்பொழுது இளைஞர்கள் மக்கள் மத்தியில் ஒரு குழம்பிய நிலை இருக்கின்றது. இதற்கு எம்மவர்கள் சிலரின் நடத்தையே காரணம் ஆகும். தமிழர் சுயாட்சிக்கழக பொது சபை உறுப்பினர் குமார் பொன்னம்பலத்தின் கூட்டத்திற்கு தலைமை தாங்குகின்றார். மறுபறத்தில் சுயாட்சிக் கழக முக்கிய பொதுச்சபை உறுப்பினர்கள் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்கு ஆதரவு தெரிவித்து மேடைகளில் பேசுகின்றார்கள். இத்தகைய நிலையே மக்களின் குழப்ப நிலைக்குக் காரணம்.

"தமிழ் ஈழத்திற்கு ஆதரவு தெரிவித்த மக்களில் பெரும்பான்மையினர் எம்முடன் இருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் அது முதலாளிகளுக்கும், ஒப்பந்த காரர்களுக்கும் மேலும் மேலும் பணம் சேர்க்க நடவடிக்கை எடுக்கின்ற கட்சியாகவே இருக்கின்றது. 1975ம் ஆண்டு பிரதமராக இருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வந்தபோது பகிஷ்கரிக்கவேண்டுமென்று வீடுவீடாகச்சென்று கோரிக்கை விட்டோம். ஆனாலும் அவரின் பொதுக்கூட்டத்திற்கு பெருந் தொகையான மக்கள் சென்றிருந்தார்கள். இதனைப்பார்த்து உணவுகூட அருந்தாமல் சென்று நித்திரைக்குச் சென்றேன். ஆனால் தேர்தலில் பொதுமக்கள் திருமதி சிறிமாவோவையும் அவரின் எடுபிடிகளையும் இருந்தஇடம் தெரியாமல் தூக்கியெறிந்து விட்டார்கள். இதனைச் சிந்திக்கவேண்டும்.

"திரு ஜே ஆர். ஜெயவர்த்தனா தவிர்ந்த ஏனைய வேட்பாளர்கள் கூறுகின்றார்கள். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக பயங்கரவாததடைச்சட்டத்தை தூக்கியெறிந்து விடுவதாக! ஆனால் நாம் ஒன்

(7-ம் பக்கம் பார்க்க)

# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 26ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(12—10—82)

மேடம்: பலகாலம் எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று வழி கோலப்படலாம். சிலருக்கு புதிதாக தொழில் கிடைக்கக்கூடும். வருவாயும் வளரும்.

இடபம்: உண்மை வழி நின்று உயர்வடைவீர்கள். மேலதிகாரியின் நம்பிக்கை உம்மீது பதியும். எதிர்பாராத அதிர்ஷ்டலாபங்கட்கும் இடமுண்டாம்.

மிதுனம்: நீண்டநாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றும் இடத்தில் சகாக்களுடன் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும். சமயோசித புத்தியால் எதையும் சமாளிக்க முடியும்.

கடகம்: மனதில் அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று. அவசரபோக்கை தவிர்க்கவும்.

சிங்கம்: சனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்கட்கும் இடமுண்டு. இனிவான பேச்சின் மூலம் கடினமான காரியத்தைக்கூடச் சாதிப்பீர்கள்.

கன்னி: குறைகேட்ட நேரிடும். கடமையில் தடைதோன்றும். நஷ்டம் அடைவதற்கு இடமுண்டு. உடல்நலிவுதென்படும். பிணிக்கு இடம்கொடுக்காது நடக்கவும்.

துலாம்: மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு. மனம் போல்யாவும் நடக்கும். இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும்கிடைக்கும்

விருச்சிகம்: இதயத்தில் நல்லெண்ணங்கள் தோன்றும். கடந்த காலச் சம்பவம் ஒன்று எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி அமைக்கும் வேண்டிய ஒருவரின் உதவியும் பெருகும்,

தனு; உங்கள் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று வேவு பார்க்கப்படும். தொழில்துறையில் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு சதியும் நடைபெறலாம்.

மகரம்: குடும்பத்தில் மகிழ்ச்சி தோன்றும். செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும். களஸ்திரவழியால் இலாபமும் கிடைக்கும்.

கும்பம்: சிந்தனையில் குழப்பநிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல் நிலை சிறிது கவலையைத் தரலாம். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். தெய்வ நம்பிக்கை நன்று.

மீனம்: இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும். தொழில் புரியும் இடத்தில் பாராட்டப்படுவீர்கள். உற்சாகமூட்டும் கடிதம் ஒன்று கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


சில தினங்கள் மட்டும்
ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தைக் கிள்ளாதே
(கலர்)

மனோகரா [யாழ் நகர்]
9-10-82—12-10-82
10-30 am, 2-15.4-45, 7-00, and 9-30
SPHINX
Color Scope

சில ... டும்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்
ராஜபார்வை

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
1. தங்கம்மா-என்ன போடியார் அம்மான் எல்லாரும் வீட்டோட ஓடுறீங்க.
2. போடியார்- இல்லை பிள்ளை, வந்தாலும் வந்தது ஒரு படம் மௌன கீதங்கள் வீட்டிலை இருக்க விடுகின்றுகளில்லை.
பாக்கியராஜ்-சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

றீகல் 4-வது ஹவுஸ்புல் வாரம். 10-30,
[யாழ்.நகர்] 2-30, 6-15 9-30
ரஜனிகாந்த்-ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி (யாழ்.நகர்)
Daily 5 shows
DOM DE LUISE
in
HOT STUFF
Action-Comedy-Color

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ரயில் பயணங்களில்

லிடோ தினசரி 5 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
VAMPIRE CIRCUS

ராணி தினசரி 5 காட்சிகள்
(யாழ் நகர்)
EYE WITNESS

கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

வின்ஸர் (குறிப்பிட்ட சிலதினங்கள்மட்டும் யாழ். நகர்) 2-வது மாதமாக
தினசரி 4 காட்சிகள்
சந்திரசேகர்--சுபாஷினி
பாலைவனச் சோலை


# டேவிற்சன்.....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றைக் கருத்திற்கொள்ளவேண்டும்.

'கொழும்பில் அல்லது தென்பகுதியில் கூட்டங்களில்பேசும் பொழுது மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினராகப் போட்டியிடும் ரோ ஹண விஜயவீரா கூறுகின்றார். 'புலிப்படையை அடக்க வேண்டுமானால் எனக்கு வாக்களியுங்கள். என்று ஐக்கிய தேசியகட்சியோ அன்றி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியோ அடக்கவும் மாட்டாது. அடக்கவும் முடியாது' என்றும் அவர் கூறுகின்றார். ஆனால் யாழ்ப்பாணம் வந்ததும், 'நான் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து விடுவேன். அதனால் புலிப்படை இருக்க மாட்டாது'' என்று அவர் கூறுகிறார் இதனை இவர் கொழும்பிலோ அன்றித் தென்னிலங்கையிலோ வியாக்கியானம்செய்வரா? அங்கேயும் இதனை அவர் கூறினால் என்ன?

''தந்தை செல்வாவின் தலைமையில், 1972ம் ஆண்டு புதிய அரசியல்யாப்பு உருவாக்கப்பட்டபோது நாம் ஆறு அம்சக் கோரிக்கைய முன்வைத்து அதுபற்றிக் கதைப்பதற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் முனைந்தோம் ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் வழங்க முன் வராததுடன் யாப்பை உருவாக்கியவரான கொல்வின் ஆர். டீ. சில்வா தான் தயாரித்த யாப்பிலிருந்து ஒரு வரியைக்கூட மாற்ற மாட்டேன்; நீக்கவும் மாட்டேன்'' என்று அடித்துக் கூறிவிட்டார்.

''தமிழ்க்காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் 1977ம் ஆண்டு தேர்தலுக்கு மூன்று மாதத்திற்கு முன்னர் 'யோகேஸ்வரனுக்கு வாக்களித்தாலும் சரி; எனக்குவாக்களித்தாலும் சரி; அது தமிழ் ஈழத்திற்கு அளிக்கப்பட்ட வாக்காகவே கொள்ளப்படும்' என்று கூறினார். இடையில் தமிழ் ஈழத்தைக் கைவிட்டு வட்டமேசை மகாநாடு கூட்டுவேன் என்று கூறினார். மீண்டும் இப்பொழுது தமிழ் ஈழம் என்று கூறுகின்றார். இவரின் கட்சித் தலைவர் தான் நீதிமன்றத்தில் வைத்து தமிழ் ஈழம்பற்றி எள்ளிநகையாடிக்கேலிசெய்தவர். ஒவ்வொரு தமிழ் மகனும் தன் மானம் மிக்கவன் உணர்ச்சி உள்ளவன் என்பதை எடுத்துக்காட்ட இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதுடன் ஏனையவர்களுக்கும் இதனை எடுத்துக் கூறவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

சட்டத்தரணி கரிகாலன் பேசும் பொழுது, ''இன்று என்னிடம் ஐ. தே. கட்சியின் வடபகுதி முக்கிய பிரமுகர் ஒருவர் வடபகுதிக்கு ஐக்கிய தேசியக்கட்சியின்முகவராக வந்துள்ளவருடன்வந்து எப்படி அரசியல் நிலைஎன்று கேட்டு நாம் உங்களுடன் பேச வேண்டும் என்றும் கூறினார். நான் என்னுடன் கதைப்பதிலும் பார்க்க தலைவர் சிவா அண்ணருடன் கதைப்பது நன்று என்றேன். இல்லை இளைஞரான உம்முடன்தான் கதைக்க வேண்டும் என்று கூறி வாக்குப்பெறவழி என்னவென்று கேட்டார். நான் கூறினேன் குட்டிமணி, ஜெகன் உட்படச்சிறையில் இருக்கின்ற 40 இளைஞர்களையும் உடன் விடுதலை செய்தால் அவர்களின் குடும்ப வாக்குகள் ஏதும் கிடைக்கும் என்று அதற்கு அவர் சிங்கள மக்கள் இதனால் கொதிப்படைவார்கள் என்று கூறிவிட்டார்'' என்று கூறினார்.

# மீண்டும்குமார்பிரசாரத்திற்கு கிழக்கே செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் மீண்டும் தேர்தல் பிரசாரத்திற்காகக் கிழக்கு மாகாணத்திற்குச் செல்லவிருக்கிறார். இம்மாதம் 13-ம் திகதி மட்டக்களப்பு, வாழைச்சேனையிலும், 14-ம் திகதி திருமலையிலும் நடக்கும் பொதுக்கூட்டங்களில் அவர் உரையாற்றுவார்.

இன்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறையிலும் சாவகச்சேரியிலும் பிரசாரக்கூட்டங்கள் நடைபெறும். 15-ம் திகதி வட்டுக்கோட்டை, காரைநகர் மாதகலிலும் 16-ம் திகதி ஊர்காவற்றுறை, புங்குடுதீவிலும் கூட்டங்கள் நடைபெறும்.

கடைசிக் கூட்டம் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் 17-ந் திகதி நடைபெறும். (க)

## 42 மாடு கடத்தல் வழக்கு:

# எதிரியை ரிமாண்டில் வைக்க நீதவான் உத்தரவு!

(சாவகச்சேரி)

42 மாடுகளைக் கடத்திய குற்றச்சாட்டின் பேரில் எதிரி றிமாண்டில் வைக்கப்பட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் எழுதுமட்டுவாளிலுள்ள அந்தோனிப்பிள்ளை றெபெட் என்பவருக்குச் சொந்தமான 42 மாடுகளைக் கிளிநொச்சியிலுள்ள மொகமட் கனி கலீம் கடத்தியதாகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி எம். எச். காரியப்பர் எதிரியை இம்மாதம் 20ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். (க)

# சிங்களக்கட்சி...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

நான் ஆட்சிக்கு வந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவேன் என்று இவருக்கு இப்போ தோன்றிய ஞானோதயம் ஏன் பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது உருவாகவில்லை. இவர்தான் 1971ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்ற நடாத்திய புரட்சியின்போது குறுப்பிட்டார். இந்திய மக்களை நாட்டைவிட்டு வெளியேற்றி இந்தியாவுக்கு செல்லும்படி கூறுவேன், அப்படி போகாது மறுக்கப்பட்டால் கடலில் தள்ளுவதுதவிர வேறு வழியில்லையென்று கூறினார் தமிழ்மக்கள் ஜனாதிபதி தேர்தலை முன்வைத்து தமிழ்மக்களுக்காக முதலைக்கண்ணீர் வடிக்கின்ற ஒவ்வொரு வேட்பாளரைப்பற்றியும் நன்கு இனம் கண்டுகொள்ளவேண்டும். இவர்களின் சுயஉருவம் என்ன என்பதை ஆராயவேண்டும்.

தமிழ்காங்கிரஸ்கட்சியென்ற கட்சியில் கேட்கின்ற குமார் பொன்னம்பலம் கூறுகின்றார் ''மானமுள்ள தமிழன் நான் எனக்கு நீங்கள் இத்தேர்தலில் அளிக்கப்போகின்ற வாக்குகள் தமிழ்ஈழத்திற்கு அளிக்கப்படும் வாக்குகள் ஆகும்'' என்று 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் 'வட்ட மேசை மகாநாடு' என்றார் தமிழ்மக்களில் ஏழு லட்சம்பேர் வாக்களித்தால் தமிழ் ஈழசபை அமைப்பேன் என்று இப்போது கூறுகின்றார். இவரின் கட்சித் தலைவரான திரு. எஸ். ஆர். கனகநாயகம் தமிழ்ஈழம் பற்றி எந்த மேடையிலாவது பேசியுள்ளாரா? திருவாளர்கள் குமாரும் மோதிலால் நேருவும் தவிர வேறுயார் இவர் கட்சியில் இருந்து தமிழ்ஈழம் பற்றிப் பேசுகின்றார்கள்?

### அமிர் தமிழர் சார்பில் கேட்டார்

திருவாளர் அமிர்தலிங்கம் தமிழ் ஈழத்திற்கு ஆணை கேட்க முடியுமானால் ஏன் நான் தமிழ் ஈழத்திற்கு ஆணை கேட்கக் கூடாது எனக்கேள்வி எழுப்புகின்றார் திரு. குமார் பொன்னம்பலம். திரு. அமிர்தலிங்கம் தனிப்பட்டமுறையில் கேட்கவில்லை. இவர் ஒன்றுபட்ட ஒற்றுமைப்பட்ட தமிழ்இனத்தின் சார்பிலேயே தமிழ்ஈழம் கேட்டார். ஒருவிடயம் பற்றிய ஆணையை ஒரு தடவையே பெறவேண்டும். இந்தியா சுதந்திரத்திற்கான ஆணையை மகாத்மாகாந்தி மட்டுமே ஒரு தடவை பெற்றார். இதனை விடுத்து தொடர்ந்து நேரு போன்றவர்களும் ஆணைகேட்கவில்லை. காந்தியுடன் சேர்ந்து தோளுடன் தோள் நின்று உழைத்து இந்திய விடுதலையைப்பெற்றனர். இதனை விடுத்து அமிர்தலிங்கம், பின்னர் குமார் என்று மாறிமாறி மக்கள் ஆணையைக் கேட்டுக் கொண்டு இருப்பது ஒரு புனிதமான பணியை இழிவுசெய்து கேலி செய்வதாகவே அமைய முடியும். வடக்கு கிழக்கு மட்டும் தமிழ் ஈழத்திற்கு சார்பாக வாக்களித்தால் போதாது. ஏனைய மாகாணங்களில் உள்ளவர்களும் வாக்களிக்கவேண்டும் என்று கோருகின்றார். இதுஎம்மக்களை ஒரு கேலிக்குரிய பொருள் ஆக்குவதாகும்.

### பாராளுமன்றத் தேர்தலுக்கு வெள்ளோட்டம்

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்ததைப்போன்று பாராளுமன்றத் தேர்தலையும் பகிஷ்கரிப்பார்களானால் ஜனாதிபதி தேர்தலில் இருந்து வாபஸ்பெறுவதுடன் அவர்களுடன் சேரவும் தயார் என்கிறார் பாராளுமன்றத்தேர்தலுக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கும் இடையே வேறுபாடு உண்டு. ஜனாதிபதி தேர்தல் தமிழ்மக்களைப் பாதிக்கப் போவதில்லை. ஆனால் பாராளுமன்றத் தேர்தல் தமிழ் மக்களின் பிரதிநிதி யார் என்பதை எடுத்துக்காட்டுகின்ற தேர்தல் ஆகும். குமார் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத் தேர்தலுக்கு வெள்ளோட்டம்விடுகின்றார். ஆகையினால் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு வெளியிடங்களில் இருந்துவரப்போகின்ற பத்திரிகையாளர்கள் புகைப்படக்காரர்கள் பிரமுகர்கள் ஆகியவர்களின் கவனத்தை நாம் கவரவேண்டுமாக இருந்தால் எமது பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் யாரும் வாக்களிக்காது வெறிச்சோடிக் கிடக்கச் செய்யவேண்டும்''

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உபதலைவர் திரு. சி. நாகராசாவும் பேசினார்.

# "கிளிநொச்சித் தொகுதி கல்வி, அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையிலுள்ளது"

(கிளிநொச்சி)

''கிளிநொச்சித் தொகுதி கல்வியிலும், அபிவிருத்தியிலும் இன்று மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்நிலை மாற அனைவரும் பாடுபடவேண்டும், இத்தொகுதிக்கு ஒதுக்கப்படும் பணத்தில் கூடுதலாக கல்வித்துறைக்கே எம். பி யால் ஒதுக்கப்படுகிறது. இவ்வாறு இருந்தும் சில பிரச்னைகளால் கல்வியில் தேக்கநிலையே காணப்படுகிறது.''

இவ்வாறு கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கல்விக்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி எம். பி. யின் செயலாளர், திரு. இ. கிருஷ்ணராசா கூறினார்.

கொத்தணிப் பாடசாலை அதிபரும் கிளிநொச்சி கல்விக் குழுவின் தலைவருமான திரு. இரா. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளிநொச்சிக் கலை இலக்கிய வட்டத் தலைவரும் கல்விக்குழுப் பிரதிநிதியுமான டாக்டர் கே. வி கே திருலோகமூர்த்தி பேசுகையில், 'கிளிநொச்சித்தொகுதி ஆரம்பிக்கப்பட்டு இதுவரை ஒருவர் மட்டுமே பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பைப் பெற்றார். அநேகர் திறமையாகச்சித்தி அடைந்தும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்துள்ளனர். இது ஒரு அநீதியான செயலாகும். தனி மாவட்ட அமைப்பு முறை இங்கு நடைமுறைக்கு வரும்போது இக்குறைபாடெல்லாம் நீங்கும்'' என்றார்.

ஆசிரியர் திரு சச்சி முருகேசு பேசுகையில், ''மாணவர்கள் ஒழுக்கம், பண்பு பேணி உயர்ந்த இலட்சியத்துடன் வாழப் பழகவேண்டும். அப்போதுதான் அவர்களின் வாழ்வு வளமாகும்'' என்று கூறினார்.

சட்டத்தரணி திரு. எஸ். விக்னேஸ்வரன் பேசுகையில், ''ஆங்கிலக்கல்வியின் மகத்துவத்தை உணர்ந்து ஊக்கத்துடன் கற்கவேண்டும். எத்துறைக்கும் ஆங்கிலம் இன்று அவசியம் தேவைப்படுகிறது'' என்று தெரிவித்தார்.

கொத்தணிப் பாடசாலை செயலாளரும் கல்விக்குழு உப தலைவருமாகிய அதிபர் திரு. ஏ. கே. இராசேந்திரம் கனிஷ்ட மகாவித்தியாலய உப அதிபர் திரு. கே. கோபாலிப்பிள்ளை ஆசிரியை திருமதி சுந்தரலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள், (வெ)

## அடிக்கல் நாட்டுவிழா

(யோகபுரம்)

யோகபுரம் மூவேந்தர் கிராம அபிவிருத்திச்சங்க கட்டிட அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் யோகபுரம் கிராமோதய சபைத்தலைவரும் மூவேந்தர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவருமான டாக்டர் விவேதநாதன் ஜே. பி. தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

துணுக்காய்ப் பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரா மங்களவிளக்கேற்றிவைத்தார். தொழிலதிபர் மில்க்வைற் திரு க கனகராசா அடிக்கல் நாட்டினார்.

சங்கச் செயலாளர் திரு. க. ஜீவகாருண்ணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். சங்கத்தின் கட்டடக் குழுத்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நன்றி கூறினார். பலர் பேசினார்கள்

## நாவலர்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

களோடும், உத்தியோகத்தர்களையும் அந்த சாலை உருவாக்கியிருக்கிறது. அது திரு. இராசரத்தினம் அவர்களின் ஞாபகமாய் இன்றும் நின்று நிலவுகிறது.

### மூவர் பணிகள்

நாவலர் இட்ட வித்தை முப்பது வருடத்துக்கு மேலே பாதுகாத்து முளைவரச் செய்தார் மகான் அருணாசலம். முளையை வளர்த்து விளைவு செய்தார் கௌரவ சு இராசரத்தினம் அவர்கள்.

(முற்றும்)

## 14 தொழிற்சங்க பிரதிநிதிகள் பிரசாரம்

(புலோலி)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் டாக்டர் கொல்வின் ஆர் டீ. சில்வாவை ஆதரித்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவதற்காக 14 தொழிற் சங்கப்பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம், தொழிற்சங்க சம்மேளனம் உட்பட ரயில்வேபகுதி, துறைமுகப்பகுதி மற்றும் அரசாங்கக்கூட்டுத்தாபனத்துறைகளைச்சேர்ந்த இந்தத்தொழிற் சங்கப்பிரதிநிதிகள் மூன்று தினங்கள் குடாபகுதியில் தங்கி பிரசாரவேலைகளில் ஈடுபடுவர்கள்

## இன, மத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்குள்ள பல ஆயிரக்கணக்கான ஐக்கியதேசியக்கட்சி ஆதரவாளர்கள் எனக்கு ஆதரவுநல்க முன்வந்துள்ளனர் 300 ரூபா சம்பளம் அதிகரிப்பு கேட்டமைக்காக ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஊழியர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர். வேலைநிறுத்தம் செய்த அவர்கள் வேலை நீக்கத்திற்குள்ளாகினர். இவர்களில் இன்னமும் 29 ஆயிரம் பேருக்கு மீண்டும் வேலைவழங்கப்படவில்லை. நான் ஜனாதிபதியாக வந்ததும் இவர்களுக்கு வேலை வழங்கி வேலையிழந்திருந்த நாட்களுக்கான சம்பளத்தையும் வழங்குவேன் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையை ரத்துச்செய்தது மிகவும் அநீதியானது நான் ஜனாதிபதியாகவந்ததும் அவருக்குக்குடியுரிமையை வழங்குவேன் 3 மாதத்தில் பாராளுமன்றத்தையும் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவேன். அதன் மூலம் இந்த நாட்டில் இன மதமொழிபேதமின்றி நல்லாட்சி ஒன்று ஏற்பட வழிவகுப்பேன் என்றார்.

திரு அனில் முனசிங்காபேசுகையில் '1977ல் விலைவாசிகளைக்குறைப்பதாகக்கூறி ஆட்சிக்குவந்த ஐ. தே. க. அரசு இன்று விலைவாசிகள் பெரிதும் உயர்ந்து மக்கள்படும் கஷ்டங்களைக் கண்டும் காணாதது போல் செயல்படுகிறது. முன்னைய ஆட்சியில் பணக்காரர்களுக்கு வரிகள் விதிக்கப்பட்டனவே தவிர ஏழைகளுக்குப் பாதகமான எந்தநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை'' என்றார்.

## இறுதி ஊர்வலத்தில் இப்படி ஒரு பயங்கரம்! இராணுவம் கைகொடுத்தது!

(மட்டுவில்)

பிரேத ஊர்வலத்தின்போது இரு கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்டதகராறின் காரணமாகப் பிரேதம் நடுவழியில் இறக்கிவைக்கப்பட்டு கொட்டன், இரும்புக்கம்பி சகிதம் இரு கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர்.

இக் கட்டத்தில் இராணுவ வீரர்களுடன் கூடிய இராணுவ லொறி ஒன்று வரவே பிரேதத்தையும் அதே இடத்தில் விட்டுவிட்டு இரு கோஷ்டியினரும்தலைமறைவாகினர்!

இப்பரபரப்பூட்டும் சம்பவம் பூநகரியில் நடைபெற்றது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:

பூநகரி அத்தாய் பகுதியில் ஒரு பிரேதஊர்வலம் நடைபெற்றது. பூநகரியில் இரு மயானங்கள் உண்டு. ஒன்று காட்டினுள் அமைந்துள்ளது. மற்றது வயல்கரையை அண்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தால் புதிதாக அமைக்கப்பட்டது.

இந்தப்பிரேத ஊர்வலம் புதிய மயானத்தை நோக்கியே போய்க்கொண்டிருந்தது. அப்பகுதியில் குடியிருப்பதாகக் கூறப்படும் ஒரு கோஷ்டி இப்பிரேத ஊர்வலத்தை நிறுத்தி அதைப் பழைய சுடலைக்குத் திசைதிருப்பமுயன்றது. ஆனால் அது சாததியப்படவில்லை. இதனால் பிரேதஊர்வலத்தில் வந்த கோஷ்டிக்கும், குடியிருப்பாளர் எனக் கூறிக்கொள்ளும் கோஷ்டிக்குமிடையில் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் கொட்டன் தடி, இரும்புக்கம்பிகள்போன்ற ஆயுதங்களும் பாவிக்கப்பட்டன. இப்பகுதிப் பிரமுகர்கள் சிலர் இருகோஷ்டிகளுடையிலும் சமரசம் ஏற்படுத்த எடுத்த முயற்சிகளும் தோல்வி கண்டன

மோதல் நடைபெறும்போது ஒரு இராணுவலொறி அங்கு வந்தது இதைக்கண்டகோஷ்டியினர் பிரேதத்தை அப்படியே விட்டுவிட்டு காட்டுக்குள் ஓடி மறைந்தனர். இராணுவத்தினர் லொறியை நிறுத்தி இறங்கி பிரேதத்திற்கு உரியவர்களை அழைத்து புதிய மயானத்திலேயே தகனம் செய்வித்து முடிந்ததும் அவர்களைப் பாதுகாப்பாக அனுப்பிவைத்துவிட்டு இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பினர். — (அ)

## பாராளுமன்றத்தைப் படையெடுத்த அரசியல் தொண்டர்கள் !

### கல்வீச்சு சம்பவத்தில் 100 பொலிஸார் காயம்

(புதுடில்லி)

இந்திய பாராளுமன்றத்தை நோக்கி 'படை'யெடுத்த அகாலிதள தொண்டர்கள் மீது பொலிசார் நேற்று துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் பலர் காயமடைந்ததுடன் பொலிசார் மீது கற்கள் வீசப்பட்டபோது நூற்றுக்கும் அதிகமான பொலிசாரும காயமடைந்தனர்.

கடந்த மாதம் அகாலிதள அரசியல் வாதிகள் சிலர் ஆர்ப்பாட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்டு ஒரு பஸ்ஸில் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டபோது, ரயில் கடவை ஒன்றில் சிக்கி முப்பத்து ஒரு அரசியல்வாதிகள் பலியானது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று கோரியே பாராளுமன்றக் கட்டடத்தை நோக்கி அகாலிதள தொண்டர்கள் நேற்று படையெடுத்தனர்.

இவர்களைக் கலைக்க பொலிசார் முதலில்தடியடிப்பிரயோகம் செய்து பின்னர் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியதாக அறிவிக்கப்பட்டது. ஆனாலும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கல்வீச்சினால் நூற்றுக்கும் அதிகமான பொலிசாரே காயமடைந்தனர் என்று நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.


# ரஸ்ற் ரவல் சேவிஸ்

## [Trust Travel Service]

## U. T. A., AEROFLOT

விமானத்திற்கான டிக்கெட்டுகளை குறைந்த செலவில்

உடனுக்குடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| கொழும்பு - பிராக் | — ரூ. 8900-00 | Aeroflot |
| கொழும்பு - லண்டன் | — ரூ. 8200-00 | Aeroflot |
| கொழும்பு - கராச்சி | — ரூ. 2700-00 | Aeroflot |
| கொழும்பு-பாரிஸ்-பிராக் | — ரூ. 12300-00 | U.T.A. |
| கொழும்பு - சிங்கப்பூர் | — ரூ. 6500-00 | |

(இரு வழி டிக்கெட்)

எம்மிடம் டிக்கெட் பெறுபவர்களுக்கு PRAGUE விசா இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படும்.

கொழும்பு செல்லாமலேயே டிக்கெட், விசா, Travellers Cheque என்பவற்றை உடனுக்குடன் யாழ்ப்பாணத்திலேயே பெற்றுக்கொள்ளலாம்.

# ரஸ்ற் ரவல் சேவிஸ்

11 A, மொம்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 24111


## மரண அறிவித்தல்

### S. ஜயிறிஸ் தவராசா

[பழைய மாணவர் (யாழ். மத்திய கல்லூரி)



S. ஜயிறிஸ் தவராசா அகால மரணமானார் இவர் காலஞ்சென்ற எம். செபஸ்தியாம்பிள்ளை, திருமதி பாக்கியம்செபஸ்தியாம்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும், திரு. S. S. மனோகரன் [அளவையியல் ஆசிரியர்], திரு S. A. பதமருஜா [கணக்காளர்], திரு. S. A. அழகராசா, செல்விகள் S. மேரி மெக்டலின், S. மேரி திரேசா ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று [12-10-82] பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

27/2, நாகராசா லேன்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

1818

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under numbre Q B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.